விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | பங்குனி 3 வெள்ளிக்கிழமை (17.03.2006) | தொலைபேசி 222 3378 | ஒலி 88

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## பலத்த பாதுகாப்புடன் நடைபெற்ற யாழ்.ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

### கூட்டமைப்பு எம்.பிக்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

2006 ஆம் ஆண்டிற்கான யாழ்.மாவட்ட முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் றியல் அட்மிரல் மொகான் விஜேவிக்ரம ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வடக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா, வட பகுதி இராணுவத் தளபதி சந்திர சிறி, யாழ். பொலிஸ் அத்தியட்சகர், 51வது படையணித் தளபதி பிரிகேடியர் மார்க் மற்றும் 92 திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் அபிவிருத்தி, மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் தொடர்பான விடயங்கள் பற்றியும் 2005 ஆம் ஆண்டு அமுலாக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரஸ்கர், ஹொக்லண்ட் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் மற்றும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹாக்ரூப் ஹொக்லண்ட் ஆகியோர் கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று பகல் 10.10 மணியளவில் இச் சந்திப்பு ஆரம்பமாகியது. விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-4,9)

## ஜெனீவாவில் ஏற்படுத்தப்பட்ட

# உடன்பாடு நடைமுறைக்கு வராவிட்டால்

# இரண்டாம் கட்டப் பேச்சு சாத்தியமில்லை

## தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அடிப்படையிலேயே அடுத்தகட்ட நகர்வுகள் மேற்கொள்ளப்படும் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். ஜெனீவா உடன்பாடு நடைமுறைக்கு வராவிட்டால் 2 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை சாத்தியமில்லையெனக் கருதலாமா எனக் கேட்டபோது அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார். இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் தலைமைப் பீடம் தகுந்த முடிவினை உறுதியாக எடுக்கும் எனவும் அவர் கூறினார்.** (12 ஆம் பக்கம் பார்க்க)



## விசேட தூதுவர் பணியிலிருந்து எரிக் சொல்ஹெய்ம் விலகல்

### புதிய தூதுவர் விரைவில் பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கை சமாதான பேச்சுவார்த்தையின் விசேட பிரதிநிதியான எரிக்சொல்ஹெய்ம் அப் பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் என்ற தனது புதிய பொறுப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளதால் தனது பணியை வேறொருவருக்குக் கையளிக்கவுள்ளதாகவும் ஆனால் இலங்கையில் ஒரு நிரந்த சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் தான் தொடர்ந்தும் ஈடுபடுவேன் என்றும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நான் பக்கச் சார்பாகச் செயற்பட்டேன் என்று இரண்டு தரப்புமே விமர்சித்து வந்திருக்கின்றன இப்படியானதொரு விமர்சனங்களால்தான் புதிய தூதர் ஒருவரை நியமிக்கின்றேன் என தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அதனை நான் அடியோடு மறுக்கின்றேன்.

எனது முடிபுக்கும் அப்படியான விமர்சனங்களுக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மோப்ப நாய்கள் முன் நிறுத்தப்பட்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வதை முன்னிட்டு யாழ். பிரதான வீதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மோப்ப நாய்கள் சகிதம் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அமைச்சர் தேவானந்தா ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமது கட்சி அலுவலகத்திலிருந்து கச்சேரிக்குச் செல்லும் பாதையில் இராணுவமும் பொலிஸும் குவிக்கப்பட்டிருந்ததுடன் கச்சேரிக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற அரச உத்தியோகஸ்தர்கள், பத்திரிகைச் செய்தியாளர்கள் துருவித்துருவி ஆராயப்பட்டனர்.

அவர்களது கையடக்கத் தொலைபேசி, ஒலிப்பதிவுக் கருவி, புகைப்படக் கருவி ஆகியனவும் அவர்களும் தனித்தனியாக மோப்ப நாய்கள் மூலமும் இலத்திரனியல் கருவிகள் மூலமும் தீவிர சோதனையிடப்பட்டு பல மணி நேரம் காக்க வைக்கப்பட்ட பின்னரே மண்டபத்தினுள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(து-132,133,43)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தாய், தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணத்தைத் தலைமையகமாகக் கொண்டியங்கிவரும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் யாழ்.மாவட்டத்தில் தாய் அல்லது தகப்பனை இழந்த நிலையில் இருக்கும் 179 பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கு மாதாந்தம் நிதியுதவி அளித்துவருகின்றது.

வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் இருந்து திரட்டப்படும் நிதியைக் கொண்டே இத்தகைய உதவியை அபிவிருத்தி நிலையம் வழங்கி வருவதாக அதன் செயலாளர் ரீ.பால தயானந்தன் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் இந்த ஆதரவுத் திட்டத்தில் தம்மையும் இணைக்கும்படி கோரி மேலும் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் விண்ணப்பித்து இருப்பதாகவும் தெரியவருகின்றது. (க-16)

# குடிநீர்க்குழாய்கள் சேதமாக்கப்படுவதை தடுக்க ஒத்துழைப்பு வழங்குங்கள்!

## பொதுமக்களிடம் மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் குடிநீர் விநியோகக் குழாய்கள் சமீப நாட்களாக திட்டமிட்ட முறையில் சிலரால் உடைக்கப்படுவதாகவும் இதனால் குடிநீர் விநியோகத்தைத் தொடர்ந்து சீராக வழங்க முடியாதிருப்பதாகவும் யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

யாழ்ப்பாணம் மாநகர சபையின் குடிநீர் விநியோகக் குழாய்கள் சமீப நாட்களாகத் திட்டமிட்டே சிலரால் உடைக்கப்பட்டுவருவதனை உணரக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாககொழும்புத்துறை, அரியாலை, நல்லூர் போன்ற இடங்களில் பொது நீர்க் கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்த குழாய்கள் உடைக்கப்பட்டதனால்பெருமளவான குடிநீர்விரயமானதுடன், குடிநீரைப் பெறுவதில் மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கியிருந்தனர்.

இவ்வாறான ஒரு அநாவசியமான பிரச்சினையை முறியடிப்பதற்கு அப்பகுதி மக்களின் பூரண ஒத்துழைப்பும் கண்காணிப்பும் மிகவும் அவசியமாகவுள்ளது. இதேவேளை இச்செயற்பாடு தொடருமாயின், நீர்விநியோகத்தை முற்றாகத் துண்டிக்க வேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான குடிநீரைப்பெறுவதில் அசௌகரியங்களை ஏற்படுத்தாது இருக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோருவதுடன், இது விடயத்தில் பொதுமக்கள் மிகுந்த கண்காணிப்புடன் இருந்து இவ்வாறான சமூகவிரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஒத்துழைக்குமாறு வேண்டுகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# ஜனநாயக நெறிமுறை, மனித உரிமை ஆகியவற்றை அமுல்படுத்த முன்னேற்ற கரமான செயற்பாடு அவசியம்

## இலங்கை வந்துள்ள முன்னாள் இந்தியப் பிரதமர் குஜ்ரால்

(கொழும்பு)

தெற்காசிய பிராந்தியத்தில் ஜனநாயக நெறிமுறைகளையும் மனித உரிமைகள் பாதுகாப்பையும் முறையாக அமுல்படுத்த முன்னேற்றகரமான செயற்பாடுகள் அவசியம் என இந்தியாவின் முன்னாள் பிரதமரும் தெற்காசிய பிராந்தியத்தின் மனித உரிமைகள் அமைப்பின் தற்போதைய தலைவருமான ஐ.கே.குஜ்ரால் தெரிவித்தார்.

தெற்காசிய மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை வந்து சேர்ந்த ஐ.கே.குஜ்ரால் நேற்று முன்தினம் காலை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில், தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கிடையில் சிறப்பான தொடர்புகளின்மை வளங்களையும், தகவல்களையும் பகிர்ந்து கொள்வதில் உள்ள குறைபாடுகள் நடைமுறைச் சிக்கல்கள் என்பன களையப்பட்டு நாடுகளுக்கிடையில் சிறப்பான தொடர்புகள் பேணப்பட வேண்டும் என்றார்.

மேலும் தெற்காசிய பிராந்தியத்தில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஜனநாயக விழுமியங்களை பாதுகாத்தல் என்பன குறித்த பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை ஒன்றும் தெற்காசிய மனித உரிமைகள் அமைப்பினால் இங்கு வெளியிடப்பட்டது.

அவ்வறிக்கையில், ஜனநாயகம் என்பது மக்களுக்கு வெறுமனே வாக்களிக்கும் உரிமையை அளிப்பதாகாது மக்களின் அடிப்படை மனித உரிமைகளும் ஒரு ஜனநாயக நாட்டில் பாதுகாக்கப்படவேண்டும். எமது அனுபவங்களின் மூலம் ஜனநாயக கட்டமைப்பிற்குள் கூட சட்டத்துறை சுதந்திரமாகச் செயற்பட முடியாமல் பல இடங்களில் உள்ளது.

தெற்காசிய நாடுகளுக்கிடையிலான தகவல், வளங்கள் பகிர்ந்தளிப்பில் உள்ள குறைபாடுகள் காரணமாக நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பின்மை அல்லது குறைபாடு காரணமாக இன்று ஆயுததாரிகளின் கைகளிலும் அணுவாயுத முயற்சிகளிலும் தெற்காசிய நாடுகள் திரும்பி வருகின்றன.

தெற்காசிய பிராந்திய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பானது எமது இந்தப் பிராந்திய நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை அரசியல் ரீதியாகவும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் முகமாகவும் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில், பரிந்துரைக்கிறது.

மேலும் அண்மைக்காலங்களில், மாதங்களுக்கிடையில் உருவாகிவரும் சகிப்புத்தன்மையற்ற தன்மை அரசாங்கத்திற்கும் அரசாங்கத்தைக் கொண்டு நடத்தும் அதிகாரிகளுக்கும் பாரிய சவாலாக அமையும் என்றார். (க)

# 800க்கும் அதிகமான மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரே நாளில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

நேற்று முன்தினம் காலை முதல் பிற்பகல் வரை யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தாங்கள் முகங்கொடுத்து வருகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

800க்கும் அதிகமாக மக்கள் இச்சந்திப்பில் தங்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் அமைச்சரை சந்திக்க வந்திருந்தனர். இவர்களது பிரச்சினைகள் தொடர்பாக தனித் தனியாக கேட்டறிந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவையனைத்தையும் தீர்க்கும் முகமான உடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதேநேரம் நாளடைவில் தீர்த்துவைக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக அனைத்து செயற்பாடுகளையும் அமைச்சர் உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிகளில் நேரடியாக ஈடுபடும் முகமாக தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்றாடம் தன்னைச் சந்திக்க வருகின்ற ஆயிரக்கணக்கான பொதுமக்களின் பல்வேறு வகையான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தனது முழுமையான அவதானத்தைச் செலுத்தி வருவ தாகவும் யாழ். மாவட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் பல்வேறு திட்டங்களையும் வகுத்து வருவதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் பொது மக்களைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகள், பிரச்சினைகளைக் கேட்டறிவதையும், அமைச்சரை சந்திக்க வந்த பொது மக்களையும் படங்களில் காணலாம்.

# இராசி பலன்

**17.03.2006**

**(பங்குனி 3, வெள்ளிக்கிழமை)**

**துதியை முற்பகல் 9.00மணிவரை**

**சித்திரை பின்னிரவு 4.33மணிவரை**

**இராகுகாலம் 10.49-12.19மணிவரை**

**சுபநேரம் 6.19-7.49 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | ஆரோக்கியம், சத்துருஜெயம், எடுத்த காரியம் கைகூடும், தெய்வதரிசனம். |
| இடபம் | வியாபரர சிந்தை, பணக்குறைவு, காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம். |
| மிதுனம் | மனச்சஞ்சலம், சொத்துக்களால் நன்மை, நிலைமாற்றம், முயற்சி தாமதம். |
| கடகம் | முயற்சி கைகூடும், போசன சுகம், தெய்வசிந்தை, தேகநலன். |
| சிங்கம் | கௌரவக்குறைவு, மனோசங்கடம், பணவிரயம், காரியதாமதம். |
| கன்னி | மாதர்நட்பு, தெய்வசிந்தை, வெகுமானம், சயனசுகம். |
| துலாம் | சோம்பல் நிலை, தனவிரயம், சிந்தனை மிகுதி, இடமாற்றம். |
| விருச்சிகம் | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், பொருள சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், நன்கொடை, தெய்வதரிசனம், வாக்குமேன்மை. |
| மகரம் | தேசாந்திரவாசம், பொருள் விரயம், வீண்பயம், சகோதரர் உதவி. |
| கும்பம் | மனக்கவலை, அஜீரணக் கோளாறு, பிறருக்கு உதவுதல், வாகனபயம். |
| மீனம் | தெய்வ தரிசனம், சயன சுகம், மனோதைரியம், பொருள் சேர்க்கை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# இரத்தின புரியில் மண்சரிவு 32 குடும்பங்கள் இடம்பெயர்வு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி கொலன்ன பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவினால் 23 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 32 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இரத்தினபுரி கொலன்ன பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த சில வாரங்களாக பெய்த அடைமழை காரணமாக கொலன்ன நட்கொட்டிகந்த, இத்தேகந்த ஆகிய இடங்களிலேயே மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவுகளினால் இரு பிரதான வீதிகள் மற்றும் 12 குறுக்கு வீதிகளுடனான் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. (க-9)

# சாரதிகளின் நியமனங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது


(கொழும்பு)


வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வலயக்கல்வி அலுவலகங்களில் பதில் சாரதிகளாக கடமையாற்றும் சகல சாரதிகளினதும் நியமனங்கள் யாவும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் பணிப்புரைக்கு அமைவாக வலயக்கல்வி அலுவலகர்களுக்கும் புதிதாக நிரந்தர சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச சேவையில் நிரந்தர சிற்றூழியர்களாகப் பணியாற்றிவரும் சாரதிக்கான தகமைகளை பெற்றிருந்தவர்களுக்கு ஏற்கனவே பதில் சாரதி நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் பணிப்புரைக்கமைய இவர்களது நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளதால் மீண்டும் தமது நிரந்தரப் பதவிகளுக்குரிய கடமைகளைச் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள். (க-9)











யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது கமராவில் சிக்கிய சில காட்சிகள் ... (படங்கள்:- திலீவின்பன், எஸ்.ரி.ராஜா)

# பாரிய நிதி நெருக்கடியில் யாழ்ப்பாண மாநகரசபை

## வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு யாழ். ஆணையாளர் கடிதம்

பாரிய நிதிப் பற்றாக்குறையைத் தாங்கிக் கொள்ளமுடியாத நிலையில் யாழ்.மாநகரசபை இருப்பதாகவும் இந்தப் பற்றாக்குறையான நிதி சபையின் செல்மதிகள் மற்றும் வைப்புப் பணங்கள் போன்ற நம்பிக்கை நிதியங்களை விழுங்கியுள்ளதாகக் கருதப்பட வேண்டியுள்ளதாகவும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம், வடக்கு-கிழக்குமாகாண பிரதமசெயலாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே 2005 ஆம் ஆண்டு முடியில் உண்மை நிதி நிலைமையைப் பார்த்தால் சபை பாரிய நிதி நெருக்கடியில் உள்ளதைக் காணலாம். எனக்கு எட்டிய தகவலின்படி இந்த விடயம் இதுவரை ஆய்வு செய்யப்பட்டதாக தெரியவில்லை.

இச் சந்தர்ப்பத்தில் இந்தச் சபையின் நிதிக்கட்டுப்பாடு போதிய அளவில் இருக்கவில்லை எனக் குறிப்பிட்ட ஆணையாளர் அண்மைக்காலத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட 95பேரையும் இன்னும் வழங்கவேண்டி இருக்கின்ற 60 பேருக்கு மேற்பட்டவர்களையும் சிந்தித்தால் இந்த நியமனங்கள் ஆளணி அங்கீகாரத்திற்கு புறம்பாக அல்லது அதனைப் பின்பற்றாது மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் என்று கருதலாம் எனவும் தெரிவித்திருக்கிறார்.

சில தனிச்செலவுகள் சபையின் நிதியில் ஒரு தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்தும். ஆனால் நியமனங்கள் போன்றன நீடித்த நீண்டகாலத்தாக்கத்தை ஏற்படுத்தும். நியமனங்கள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகளுக்குப் புறம்பாக நியமனங்கள் மேற்கொள்ளப்படும்பொழுது இறுக்கமான நடவடிக்கை உடனடியாகவே எடுக்கப்பட்டிருந்தால் இவ்வாறானதொரு பாரிய இக்கட்டில் சபையின் நிதிநிலைமை மாட்டியிருக்க முடியாது என்று கருதுகின்றேன்.

குறிப்பாக, விதிகளுக்கு மாறாக நியமனங்கள் அல்லது கொடுப்பனவுகள் செய்யும்பொழுது, மாகாண சபை எடுக்கின்ற பல்வேறு நிர்வாக நடவடிக்கைகளும் அதற்கும் மேலான கணக்காய்வாளர் நாயகம் மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் 226ஆம் பிரிவின் கீழ் அந்தந்த நியமனங்களுக்கான செலவினங்களை அறவிட நடவடிக்கை உடனுக்குடன் மேற் கொண்டிருந்தால் இவ்வாறான தாக்கங்கள் ஏற்படவாய்ப்புக் குறைவாகவே இருந்திருக்கும். முழுச் சம்பளக் கொடுப்பனவுகளை மாகாண சபை மீளளிக்கும் போது பிரச்சினை எழாது. எனினும் 2005 ஆம் ஆண்டு போல குறைந்த வீதத்தை மீளளிக்கும் போதுதான் பிரச்சினைகள் எழுகின்றன.

இவ்வாறான நிலைமைகளை எதிர்பார்த்தே நியமனங்கள் போன்றன செய்யப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும் எனவும் அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அலட்சியம்

யாழ்.மாவட்டத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளில் அரசசார்பற்றநிறுவனங்கள் அலட்சியம் காட்டுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

யாழ்.மாவட்டத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு சுமார் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் நிர்மாணிக்கப் படவேண்டிய தேவையுள்ளது. இந்த நிலைமைகளை தெளிவுபடுத்தி நாம் பொது வேண்டு கோளைவிடுவித்த போதுவீடுகளை அமைப்பதற்கு ஏராளமான நிறுவனங்கள் முன்வந்தன.

வீடமைப்பு உதவிகளை வழங்க முன்வந்த நிறுவனங்களுக்கு நாம் வேலைத்திட்டங்களை வகுத்து போதியளவு அவகாசமும் வழங்கியிருந்தோம். ஆனால் ஒரு சில நிறுவனங்களைத் தவிர ஏனைய நிறுவனங்கள் ஆக்கபூர்வமாக செயற்படாததினால் இதுவரையில் 275 வீடுகள் மட்டுமே அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடைத்தங்கல் முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர் என்றார். (கு)

# கடற்படை கைதுசெய்த ஐந்து இந்திய மீனவர்களின் கதி என்ன?

யாழ்.வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட 5 இந்திய மீனவர்கள் நீதிமன்றத்தில் இதுவரை முன்னிலைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி வல்லிபுரம் கடற்பரப்பில் கடந்த திங்கட்கிழமை அத்துமீறி மீன்பிடித்துக்கொண்டிருந்த போது 5 இந்திய மீனவர்கள் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களால்கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது இந்திய மீனவர்கள் 5 பேரும் அப்பாவிகள் என்றும், இவர்கள் பெரிய முதலீட்டாளர்களின் கூலிக்காக தொழில் புரியும் தொழிலாளர் என்பதும் தெரியவந்தது.

இதனால் இவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க கடற்றொழிலாளர் சமாசம் தீர்மானித்திருந்தது. அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் வடமராட்சி கடற்றொழிலாளர்களின் விருப்பத்துக்கு மாறாக இந்திய மீனவர்களை சட்ட நடவடிக்கைகளுக்கு உட்டுபத்தப் போவதாக கூறித் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

ஆனால் அவர்கள் இதுவரையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இதனால் வடமராட்சி மீனவர்கள் வீண்பழி சுமத்துவதற்காக 5 இந்திய மீனவர்களையும் தம்வசம் வைத்து சதிமுயற்சிகளில் ஈடுபடலாம் என்று வடமராட்சி கடற்றொழிலாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (கு)

# கூட்டுறவுச் சட்டத்தை மறுசீரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கூட்டுறவுச் சட்டம் விரைவில் மறுசீரமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான சட்டமூலம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு கூறுகிறது.

மேலும் நீதி சட்டமூலப் பிரிவுடன் இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்படவுள்ளன என்றும் இந்தப் புதிய மறுசீரமைப்பின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் கிடைக்கும் எனவும் அமைச்சு கூறுகிறது.

அத்துடன் இதன்மூலம் விரைவான தீர்மானங்களை இந்தச் சங்கங்கள் மேற்கொள்ள முடியும் என்பதுடன் காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு, வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இந்த மறுசீரமைப்பு மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரம் கிடைக் கும்.

2000ஆம் ஆண்டு கூட்டுறவுத்துறையின் செயற்பாடு களைக் கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப் படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் அதன் ஆலோசனைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பில், தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருவதாககூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மஹிந்தவின் சிந்தனைக்கொள்கைகளுக்கமைய கூட்டுறவுத்துறையை ஊக்குவிப்பதற்கு பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-7)

# இன்று ஒரு தகவல்

## இருந்தும் இல்லாதார்

உலகில் உள்ளவர் ஒருபுறமும், இல்லாதவர் ஒரு புறமுமாக மக்களிடையே பெரும் போராட்டம் தொடர்கின்றது. உள்ளவர்கள் தாம் உயர்ந்தவர்கள் எனக் கருதி இல்லாதவர்களைச் சிறுமைப்படுத்துகின்றார்கள். பணம், பொருள், காணிபூமி,சொத்துச் சுகங்கள் உள்ளவர்களையே எல்லோரும் உள்ளவர்கள் என இவ்வுலகில் கருதுகின்றார்கள்.

இந்த விதத்திலே பெரும் வசதிபடைத்தவர்களாக இருப்போரில் பலா் பிறா்க்கு உதவி செய்யாதவர்களாகவும், தானதா்மம் செய்யாதவர்களாகவும் உலோபிகளாக இருப்பதையும் வசதி குறைந்தவர்களாக உள்ளவர்கள் அன்றாட உழைப்பாளிகளாகவும், பிறர்க்கும் உதவி செய்து தாமும் தம் வருமானத்திற்கேற்ப சிக்கனமாக செலவு செய்து சிறப்புடன் வாழுகின்ற தன்மையுடையவர்களாக இருப்பதையும் காணலாம். இன்னும் சிலர் தம் வருமானத்திற்கு மேலாக செலவு செய்பவர்களாகவும், ஊதாரிகளாகவும், கடன்காரர்களாகவும் ஊர்ப்பழிக்கு ஆளாகின்றார்கள். இதற்குக் காரணம் இல்லாதார் உள்ளவர் மேற்பகையுணர்வுடனும், பொறாமையுடனும் அவர்களுக்கு இணையாகப் போட்டியாக வாழ முனைவதும் உள்ளவர்கள் இல்லாதார்க்கும் கொடுத்துதவி அரவணைத்து அன்பு காட்டாது ஏழை, எளியவன், வக்கற்றவன் எனப் புறந்தள்ளி வாழ்வதுமே ஆகும். இதனாலேயே வள்ளுவப் பெருந்தகையாரும்,

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" எனச் சிறப்புறக் கூறியுள்ளார். உலகியல் வாழ்வுக்குப் பணம், பொருள் அத்தியாவசியம் என்பது தவிர்க்க முடியாததே. ஆயினும் பணம்தான் வாழ்க்கை, பணத்தினால் எதையும் சாதித்து விடலாம் என்பது ஏற்புடையதல்ல. தேவைதான் முக்கியமானது. உலகில் யாருக்கும் எது எது தேவைப்படுகின்றதோ அந்தந்த நேரத்தில் அத் தேவைகள் தான் முதன்மையாகுமன்றி மற்றெதுவும் வேண்டப்படமாட்டாது.

இதனை நன்குணர்ந்த பெரியாரொருவர் "சிறுதுரும்பு ஆனால் தேவைப்படும் போது அது பெரிது" எனக் கூறியுள்ளார். கிராமிய மக்கள் மூக்கு உளைவு (நாசித் தொல்லை) ஏற்படும் போது கிடைக்கும் ஒரு துரும்பு தும்மலை வரவழைத்தவுடன் ஏற்படும் சுகம் அலாதியானது என மன நிறைவுடன் கூறுவார்கள். இன்றைய உலகில் பணத்திற்கு உள்ள மதிப்பும் அதற்காக மக்கள் படும்பாடும் சொல்லுந்தரமன்று.

ஆயினும் எவ்வளவு தான் செல்வமிருந்தாலும் ஏற்படக் கூடிய நோய்களையோ மற்றும் பல தொல்லைகளையோ பணத்தால் தீர்க்கமுடியாதிருப்பதை எண்ணும்போது தான் பணமானது வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதொன்றேயன்றி அது எல்லாவற்றையும் சாதித்துவிடக் கூடியதல்ல என்பது புலனாகும்.

எமது அயலில் உள்ள நல்ல வசதி படைத்த ஒருவர் பக்கத்து வீட்டில் இருக்கும் தன்னிலும் பார்க்க வசதி குறைந்த ஒருவரிடம் வந்து அடிக்கடி வேண்டியபோதெல்லாம் கைமாற்று வாங்குவார். ஒருநாள் அந்த வசதி படைத்த பெரியவரிடம் நீங்கள் இல்லாதவரா? ஏன்? இப்படி உங்களிலும் வசதிகுறைந்தவரிடம் உதவி கேட்கின்றீர்கள் எனச் சிலர் கேட்டார்கள்.

அப்பொழுது சத்தியமாக வீட்டில் பணம் இல்லை. இவர் (அயலவர்) எப்பொழுதும் வீட்டில் ஏதாவது வைத்திருப்பார். எனவே தான் இவரிடம் கைமாற்று வாங்குகின்றேன் என்றார். அப்படியாயின் உண்மையில் பெரியவர் வசதியில்லாதவரா? எனக் கேட்ட போது அவர் சொன்னார் பணம், நகை யாவும் பெருமளவில் வங்கியில் இருப்பதாகவும் வங்கிக்குப் போய் வருவதிலும் பார்க்க சில்லறைச் செலவுகளுக்கு அவ்வப்போது அயலவரிடம் வாங்கிவிட்டு திரும்பக் கொடுப்பது சுலபம் என்றும் கூறினார். இருந்தும் இல்லாதவர்களாக வாழ்பவர்கள் இன்று எம்மிடையில் இப்படி எத்தனை? எத்தனை? பேருளரோ...?

**நீர்வை மணி**

# மன்னார் மாவட்ட விவசாயிகளின் கஷ்ட நிலையைப் போக்க நடவடிக்கை எடுங்கள்!

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி விவசாய அமைச்சருக்கு கடிதம்

விவசாயிகளிடம் இருந்து நெல்லைக்கொள்வனவு செய்வதற்காக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் மாவட்ட அரச அதிபரிடம் 40 மில்லியன் ரூபாவை முற் பணமாக கோரியுள்ளார். ஆனால் இதுவரை அந்த முற்பணம் வழங்கப்படவில்லை. இதனால் உடனடியாக அந்தப் பணத்தைப் பெற்றுக்கொடுக்க உதவுமாறு கோரி வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் விவசாய அமைச்சருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

மன்னார்மாவட்டத்தில் 2005/2006 ஆம் ஆண்டு பெரும்போகத்தில 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையில் 25 ஆயிரம் ஏக்கரில் மாத்திரம் நெல் அறுவடை கிடைக்கலாம் என மன்னார் மாவட்ட கமத்தொழில் திணைக்களம் எதிர்பார்க்கிறது.

விவசாயிகளிடமிருந்து 2005/2006 பெரும்போக நெல்கொள்வனவு செய்வதற்குமன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து முற்பணமாக ரூபா 40மில்லியனை அவரது 16.02.2006திகதி 11/3/5/14 இலக்க கடிதத்தின் மூலம் கோரியுள்ளார் என்பதை அறிகிறேன். தற்போது பெரும்போக அறுவடை மன்னார்மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டு வருவதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாவட்ட கமநலசேவைத்திணைக்கள உதவி ஆணையாளரால் நெல் கொள்வனவுக்கென முற்பணமாக கோரப்பட்ட 40மில்லியனும்2006ஆம்ஆண்டு பங்குனி மாத இறுதிக்கு முன்பு கிடைக்காத பட்சத்தில் மன்னார் மாவட்ட விவசாயிகள் மத்தியில் அது பெரும் குழப்ப நிலையை உருவாக்கக்கூடிய சாத்தியம் இம்மாவட்டத்தில் தென்படுவதை என்னால் அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

எனவே தாங்கள் இவ்விடயத்தில் உடனடி கவனம் செலுத்தி கிளிநொச்சி மற்றும் வேறு மாவட்டங்களுக்கு முற்பணம் கொடுத்தது போன்று மன்னார் மாவட்ட கமநலஅபிவிருத்தித் திணைக்களஉதவிஆணையாளரால் கோரப்பட்ட முற்பணத்தைக் கிடைக்கச் செய்வதன் மூலம் இம்மாவட்ட விவசாயிகளின் கஷ்ட நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (சு)

# சம்பள முரண்பாடுகளை நீக்க தேசிய சம்பள ஆணைக்குழு

(கொழும்பு)

புதிதாக தேசிய சம்பள ஆணைக்குழுவை அமைப்பது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளர். அரச துறையில் நிலவும் சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்கி நியாயமான கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பது இந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும். அதன் இணைத் தலைவர்களாக லயனல் பெர்னாண்டோ, சாளி மற்றியூ ஆகியோர் நியமிக்கப்படுவார்கள்.

தேசிய சம்பள ஆணைக்குழுவை அமைப்பதற்கு அப்பால் அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளஆளணியை மறுசீரமைப்பது எனவும் ஜனாதிபதி முடிவு செய்துள்ளார். புதிய ஆணைக்குழுவிற்கு உதவி செய்யும் வகையில் நிலையியல்குழுவொன்று நியமிக்கப்படும். அதில் அனைத்துத் தரப்பையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பல நிபுணர்கள் உள்ளடக்கப்படுவார்கள். அந்தக் குழுவின் பங்களிப்போடு தொழிற்சங்க அமைப்புக்கள், அமைச்சுக்கள் ஆகியவற்றுடன் விரிவாக கலந்துரையாடக்கூடியதாக இருக்கும்.

ஆணைக்குழு கண்டறிந்த யோசனைகளும் அரச துறை சம்பளக்கொடுப்பனவுகள் உள்ளடக்க வேண்டிய கட்டமைப்பு தொடர்பான கொள்கைகளும் நிதியமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த அறிக்கை அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட யோசனைகள் வகுக்கப்படுவதற்கு முன்னர் கையளிக்கப்படும். இந்த நடைமுறையில் வளர்முக நாடுகளின் சம்பள முறைகளையும் கருத்தில் கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (க-9)

### முல்லைத்தீவில்

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கையளிப்பு








முல்லைத்தீவில் ஆழிப்பேரலை பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கள்ளப்பாடு வடக்கு கிராமத்தில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகள் கையளிக்கும் இந்நிகழ்வு ஆழிப்பேரலைத் திட்டப் பகுதியின் நிர்வாக அலுவலகர் றொபேட் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கேற்றப்பட்டதையடுத்து தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக்கழக கொடி ஆகியன ஏற்றிவைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து முதலாவது வீட்டினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஜேர்மன் நாட்டுக் கிளையைச் சேர்ந்த மார்ட்டின் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன் பயனாளியிடம் வீட்டுத்திறப்பினையும் கையளித்தார்.

இதனையடுத்து முறையே ஏனைய வீடுகளை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் கல்வி நலன் திட்டப் பிரதிநிதி (UNICEF) பென்னி புறூவ் அம்மையார், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ராங்கன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சூசைதாசன், முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் உட்பட பலர் நாடாக்களை வெட்டி வீடுகளைத் திறந்துவைத்து பயனாளிகளிடம் வீட்டுத் திறப்புக்களையும் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஒன்றுகூடலில் சிறப்புரைகள் இடம்பெற்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி, அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். (க)

### யாழ். மாவட்டத்தில்

# இயல்பு நிலையை ஏற்படுத்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புத் தரப்பினரால் யாழ். மாவட்ட மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படும் வகையில், ஒரு சில நட வடிக்கைகள் இடம்பெறுவதாக பொது மக்கள் தனது அவதானத்துக்குக் கொண்டுவந்துள்ளதாகவும், இவ் விடயம் தொடர்பில் தான் பாதுகாப்புத் தரப்பினரின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பல்வேறு பிரச்சினைகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்ட மக்களின் இயல்புநிலையை உறுதிப்படுத்துவதற்கு தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார். (க)

## மாணவர்களின் கல்வி நிலை குறித்து விடுதலைப்புலிகள் கலந்துரையாடல்

அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் மணிவண்ணன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது மாணவர்களின் இன்றைய கல்வி நிலை, தற்போதைய நிலையில் மாணவர்களின் பங்களிப்பு, அரசு தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை எவ்வாறு அடக்கி முடக்கி வருகின்றது, எதிர்காலத்தில் போராட்டத்தின் போது மாணவர்களின் பங்களிப்பு என்பன போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில் தளபதி பிரபா, மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், துணை அரசியல் பொறுப்பாளர் சீராளன், மட்டக்களப்பு மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் மணிவண்ணன், மாவட்ட கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் தமிழர்வன், பாடசாலை அதிபர் ஆலோசியஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

## விவசாயிகளுக்காக சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் பிக்குகள்!

பொலநறுவை விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் வெலிக்கந்தை செவனபிட்டியவில் பௌத்த பிக்கு ஒருவர் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

வெலிக்கந்தை செவனப்பிட்டிய சுசிரிகம விகாரையைச் சேர்ந்த தம்புள்ளே தேரரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றார்.

விவசாயிகளின் பிரச்சினைகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையிட்டு தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு வலியுறுத்தியே அவர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தனியே பௌத்த பிக்கு ஆரம்பித்த இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தற்போது மேலும் மூவர் இணைந்துள்ளனர். (க)

## இத்தாலியில் உள்ள தபாலகங்களில் தொழில் ஒப்பந்த அனுமதிப் பத்திரம் பெற இலங்கையரும் விண்ணப்பித்தனர்

(கொழும்பு)

இத்தாலியில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள இலங்கையர் உட்பட 3 இலட்சம் பேர் தொழில் ஒப்பந்த வதிவிட அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக இத்தாலியிலுள்ள தபாலகங்களில் விண்ணப்பித்துள்ளார்கள்.

பொது மன்னிப்பு அடிப்படையில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பேர் சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு தொழில் ஒப்பந்த அடிப்படையில் வதிவிட அனுமதியை வழங்க இத்தாலிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த திங்கட்கிழமை வதிவிட அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேற்றவாசிகள் தபாலகங்களில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சென்றுள்ளதாக இத்தாலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத குடியேற்ற வாசிகளுக்கு தொழில் ஒப்பந்த அடிப்படையில் வதிவிட அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் இத்தாலியில் ஆரம்பமானதாகவும் 3 இலட்சம் பேர் இதுவரை விண்ணப்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை, ஆபிரிக்கா, பிலிப்பைன்ஸ், சீனா, இலத்தின் அமெரிக்கா உட்பட பல நாடுகளைச் சேர்ந்த 6 இலட்சம் சட்டவிரோத குடியேற்றவாசிகள் இத்தாலியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## 3 மாதகால நிவாரணம் 30இல் விநியோகம்!

(கொழும்பு)

கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்குரிய இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஒரே முறையில் வழங்கப்படுமென்று மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக சுமார் 4 கோடி இரண்டு இலட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், எதிர்வரும் 20ஆம் திகதி முதல் உலருணவுக்காக அட்டை வழங்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

கடந்த 16 வருடகாலமாக நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு விநியோகிக்கப்படாமல் இருந்து வந்த நேரடி தபால் விநியோகமும் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆரம்பித்து வைக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-9)

## முஸ்லிம் துணை இராணுவ குழுவில் இணைய மறுப்போர் மீது தாக்குதல்

தென் தமிழீழத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் முஸ்லிம் துணை இராணுவக் குழுவில் இணைய மறுப்போர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வாழைச்சேனை முஸ்லிம் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

முஸ்லிம் துணை இராணுவக் குழுவினரை வாழைச்சேனையிலும் உருவாக்க கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்தி வருவதாகவும் இதை நிராகரிப்போரைத் தாக்கி வருவதாகவும் அத்தகவல்கள் தெரிவித்தன.

தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களுக்கு இடையே பதற்றத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுவதாகவும் வாழைச்சேனை மக்கள் தெரிவித்தனர். (க)

## குற்றச் செயல்களைத் தடுக்க வவுனியாவில் விழிப்புக் குழுக்கள்



வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ள கொலைகள், கொள்ளைகள், கோஷ்டிமோதல்கள், ஆட்கடத்தல் போன்ற குற்றச் செயல்களைத் தடுக்க பிரதேச கிராம மட்டங்களில் விழிப்புக்குழுக்களை அமைப்பதற்கு வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழியனால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட நீதிமன்றில் நீதிபதி இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலில் நீதிபதி உரையாற்றுகையில்,

2004ஆம் ஆண்டிற்குப் பின்னர் குறைந்து காணப்பட்ட குற்றச் செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பாக இறம்பைக்குளம், பூந்தோட்டம், வேப்பம்குளம், குருமன்காடு ஆகிய சந்திகளில் குழு மோதல்கள் ஏற்படுவதற்கு சாத்தியம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கெரோயின் போதை மருந்து பாவித்தல், விற்றல் போன்ற குற்றங்கள் புரிபவர்களில் 95 வீதமானவர்கள் தேக்கவத்தை பகுதியில் உள்ளதாகவும்- இது சம்பந்தமாக பொலிஸார் கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியா அரச அதிபர், பொலிஸ் அதிகாரிகள், சட்டவாளர் சங்கத்தலைவர் சிற்றம்பலம் மற்றும் கிராம சேவகர்கள் கலந்துகொண்டனர். (க)

## பயங்கரவாதத் தடுப்பு குறித்து இலங்கை சமர்ப்பித்துள்ள வரைவுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குமாம்



ஐக்கிய நாடுகள் சபையின் பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பாக இலங்கை சமர்ப்பித்துள்ள விரிவான வரைவு உடன்படிக்கைக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புக் குழுவிற்கு இணையாளராக செயற்பட்டுவரும் இலங்கை, இது தொடர்பான விரிவான உடன்படிக்கை வரைவொன்றினையே உருவாக்கியுள்ளது.

இது குறித்து உடன்பாடொன்றை எட்டுவதற்கு இது ஒரு நல்ல தருணமாகவுள்ளது.

தேசிய விடுதலை என்ற பெயரில் செயல்படும், பயங்கரவாதிகளை நீக்கவேண்டும்.

அத்துடன் அரச படைகளின் சில செயல்களை பயங்கரவாத நடவடிக்கைகள் என விரிவான உடன்படிக்கைக்கு அமைய அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

## வயது குறைந்தோர் படைச் சேர்ப்பு குறித்து இராணுவத்தினர் தவறான தகவல் யுனிசெப் கடும் அதிர்ச்சி!

வயது குறைந்தோரை படைகளில் சேர்ப்பது தொடர்பாக இராணுவத் தரப்பு வெளியிட்டிருக்கும் தவறான தகவலால் சர்வதேச நிறுவனமான யுனிசெப் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது.

ஆங்கில நாளிதழலான 'மோர்னிங் லீடர்' ஏட்டில் நேற்றுமுன்தினம் கடந்த ஜனவரியிலிருந்து ஆயிரத்து 358 வயது குறைந்தோர் புலிகளின் படையணிகளில் சேர்க்கப்பட்டிருப்பதாக இராணுவத்தை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் கடும் அதிர்ச்சியை வெளியிட்ட யுனிசெப் பேச்சாளர் ஜுன்கோ மிதானி,

கடந்த ஜனவரியில் 25 பேர் மட்டுமே படையணிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பெப்ரவரி மாத புள்ளி விவரம் இன்னும் வெளியிடப்படவே இல்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் இத்தகைய தவறான தகவலை வெளியிட்ட இலங்கை ஊடகத்துக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கத்தின் ஏழாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கன்னாதிட்டி மக்கள் வங்கி பிராந்திய அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். (கு)

## வாராந்த நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வ சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்படும் வாராந்த நிகழ்வில் இன்று மு.ப 10.30 மணியளவில் 'முன்பு செய்தவத்தின் ஈட்டம்' என்னும் பொருள் பற்றி விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (க-35)

## ஆன்மீகச் சொற்பொழிவு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு 'புகழும் வீரமும் பொன்றிடாவோ' என்னும் விடயம் பற்றி ஓய்வுபெற்ற அதிபர் தா.வீரசிங்கம் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (க-35)

## சீருடைகள் கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளையால் சீருடைகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு செஞ்சிலுவைச்சங்க கிளை தலைவர் வி.திருவியராசா, செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லான் ஆகியோர் கலந்துகொண்டு 246 மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கினார்கள். (க-35)

## கைது செய்ய நடவடிக்கை

சட்ட விரோதமாக நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களைக் கைது செய்வதற்கு குடிவரவு- குடியகல்வுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதென்று அதன் கட்டுப்பாட்டாளர் பீ.பி.அபயக்கோன் தெரிவித்தார்.

குறுகிய கால விசாக்களைப் பெற்று நாட்டினுள் பிரவேசித்த ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் தொடர்ந்தும் இங்கு தங்கியுள்ளமை தெரியவந்துள்ளது என்றும் இதனையடுத்தே இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏற்கனவே நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)






அன்னை தெரசா, இந்திராகாந்தி, கல்பான சாவ்லா, சானியா மிர்சா என்ற சாதனைப் பெண்க ளைப் பட்டியலிட்டால் பெயர்கள் நீண்டுகொண்டே போகும். ஒரு பெண் நாள் ஒன்றுக்கு 19 மணி நேரம் உழைக்கிறாள்.

அதேநேரத்தில் ஒரு ஆண் 10 இலிருந்து 14 மணி நேரம் வரைதான் உழைக்கிறான். என்று ஆய்வறிக்கையொன்ற கூறுகிறது. ஒரு புறம் பெண்களின் சாதனைகள் நிகழ்ந்தேறினாலும் மற்றொரு புறம் பெண்களுக்கெதிரான கொடுமைகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

## ஆணை விட பெண் சக்தி நிறைந்தவள்

பெண்களை எப்போதும் வலிமையற்றவர்களாகவும், மென்மையானவர்களாகவும்தான் கவிதைகள், காவியங்கள் எல்லாம் சொல்லுகின்றன. ஆனால் உண்மையில் ஆணைவிட பெண் வலிமையானவள். மருத்துவ விஞ்ஞானமோ பெண்ணை வலிமையானவள் என்று ஆய்வுகள் மூலம் நிரூபித்துக் கூறுகிறது.

பொதுவாக 100 பெண் குழந்தைகள் கருவாகத் தாயின் வயிற்றில் உருவாகும் போது அந்த 100 பெண் குழந்தைகளுக்கு இணையாக 140 ஆண் குழந்தைகள் அதேநேரத்தில் இயற் கையாக கருவாக உருவாக்கப்படுகின்றன. அதாவது கரு உருவாகும்போதே ஆண் இனம் பெண் இனத்தைவிட ஒன்றரை மடங்கு அதிகமாக உருவாக்கப்படுகிறது. இப்படி அதிகமாக உருவாக்கினால்தான் சம நிலையாவது கிடைக்கும் என்று இயற்கை நினைக்கிறது.



இயற்கையின் எண்ணம்போலவே கருவாக உருவான குழந்தைகள் நல்ல நிலையில் குழந்தையாக பிறக்கும் போது 100 பெண் குழந்தைகளுக்கு 106 ஆண் குழந்தைகள் என்ற கணக்கில்தான் பிறக்கிறது. அதாவது கருவாக ஜனித்து 10 மாதம் கழித்து பிறப்பதற்குள்ளேயே 34 ஆண் குழந்தைகள் கருவிலேயே அழிந்து விடுகின்றன. பெண் குழந்தைகள் ஒன்றுகூட இயற்கையாக கருவிலேயே அழிவதில்லை என்பதுதான் ஆச்சரியம்.

நோயிலிருந்தும் மரணத்திலிருந்தும் பெண் குழந்தைகளையும், வளர்ந்த பெண்களையும் காப்பாற்றுவது 'இம்முன்னோ குளோபின்' என்ற எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்ட இரத்தபுரதமாகும்.

தற்காப்பு சக்தியை அதிகம் உண்டாக்கும் ஒருவகை ஹார்மோனான 'ஹீமோ பைலியா ஜிடென்டரஸ்' என்பது கருவுற்ற தாயின் உடலிலிருந்த கருவில் உள்ள குழந்தைக்கு அதுவும் பெண் குழந்தை இருந்தால் மட்டுமே செல்கிறது. இது ஒருபோதும் தாயிடமிருந்து ஆண் குழந்தைக்கு செல்வதில்லை. இந்த அதிசயமான போக்கு எதனால் ஏற்படுகிறது என்பது பற்றிய ஆராய்ச்சியை மரபியல், செல்லியல், நுண் செயல் இயல் அறிஞர்கள் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறார்கள். விடைதான் கிடைக்கவில்லை.

இந்த 'ஹீமோபைலியா ஜிடென்டரஸ்' ஹார்மோனால் தான் பெண் குழந்தைகள் கடுமையான பக்டீரியாக்களின் தாக்குதல்களை ஓரளவு சமாளித்து வாழ்ந்துவிடுகிறது. சராசரி ஆயுள் என்று எடுத்துக் கொண்டால் ஆண்ணைவிட பெண் கூடுதலாக 8 வருடங்கள் ஆரோக்கியமாக வளர்கிறாள்.

உடல் வலிமை என்பது வேறு, உடலின் எதிர்ப்பு சக்தி என்பது வேறு, வலிமைஎன்கிறவிதத்தில் ஆணின் உடல் வலிமையாகவே இருக்கிறது. எதிப்பு சக்திகள் என்கிற விதத்தில் பெண்ணின் உடல் எதிர்ப்பு சக்தி நிறைந்ததாகவே இருக்கிறது.

# எந்தெந்த நேரத்தில் என்னென்ன சாப்பிடவேண்டும்

பாரம்பரிய முறையான ஆயுர்வேத சிகிச்சை முறையில், நம் தட்பவெப்ப நிலைக்கேற்ப, உடல் நிலைக்கேற்ப எந்தெந்த நேரத்தில் என்னென்ன உணவு வகைகள் சாப்பிடவேண்டும் என்று தெள்ளத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விபரங்கள் 'சஞ்சீவனி ஆயுர்வேதா பவுண்டேஷன்' அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

உணவுக்கு ஆயுர்வேதம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. உடலில் உள்ள மூன்று தோஷங்கள் (வாதம், பித்தம், கபம்) மீது உணவு செயலாற்றும் முறை, ஏழு தாதுக்களை (தசை, இரத்தம், கொழுப்பு, எலும்பு, எலும்பு மஜ்ஜை, சதை, மகப்பேற்றுக்கு உதவும் தசை) செறிவூட்டுவது, செரிமானம், காலநிலைக்கேற்ற செரிமானம் ஆகியவற்றுக்கு ஏற்ப உணவு முறைகள் தனித் தனியே உள்ளன.

நாம் மேற்கொள்ளும் உணவு முறை தான் நமக்கு ஆரோக்கியத்தையோ, ஆரோக்கியக் குறைவையோ ஏற்படுத்துகிறது. மூன்று தோஷங்களையும், ஏழு தாதுக்களையும் சம நிலையில் வைத்திருத்தலே உணவின் முக்கிய பொறுப்பு. சீரான உணவு முறையைக் கையாண்டால் இவையும் சீராக இருக்கும் சீரான செரிமானம் சீரான ஆரோக்கியத்தைத் தருகிறது. செரிமானத்தை ஆயுர்வேதத்தில் 'அக்னி' என்று அழைக்கின்றோம்.

### உணவு உண்ணும்போது கவனிக்கவேண்டியவை

*அளவு:* நாம் எந்த உணவு உண்டாலும், அதன் அளவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சரியான அளவு தான் சீரான செரிமானத்துக்கு வழிவகுக்கும். கடினமான உணவு வகைகள், மென்மையான உணவு வகைகள் இரண்டுமே அவற்றின் அளவு மாறாமல் சாப்பிட்டால் பிரச்சினை ஏற்படாது. இதில் மாறுபாடு ஏற்பட்டால் சிக்கல்தான்.



• இனிப்பு, இறைச்சி ஆகியவற்றை, நம் திருப்தி நிலைக்குப் பாதி அளவே சாப்பிடவேண்டம். மென்மையான உணவு வகைகளை முழுத் திருப்தி அளவுக்குச் சாப்பிடலாம். ஆனால் அதற்கு மேல் சாப்பிடக்கூடாது. எப்போதுமே முக்கால் வயிறு தான் உணவு உட்கொள்ள வேண்டும். அதுவும், அரை வயிற்றுக்குத் திட உணவும், கால் வயிற்றுக்குத் திரவ உணவும் சாப்பிட வேண்டும். மீதியுள்ள கால் பகுதியை காலியாகவே வைத்திருக்க வேண்டும்.

*சாப்பிடும்முறை:* பாயாசம், பொங்கல், இனிப்புக்கள், எண்ணெயில் தயாரித்த உணவு வகைகளைத் தொடக்கத்திலேயே சாப்பிடவேண்டும். இவை அனைத்தும் கடின உணவு வகைகளைச் சார்ந்தவை. சாம்பார், ரசம் போன்றவற்றை, இனிப்புக்குப் பின் சாப்பிடவேண்டும். கடைசியில் மோர் சாப்பிட வேண்டும். மேற்கத்திய முறை போல, இனிப்பைக் கடைசியில் சாப்பிடுவது செரிமானத்துக்கு ஏற்றதல்ல. ஏற்கனவே வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு, இனிப்பையும் கடைசியில் உள்ளே திணித்தால், செரிமானத்தில் கோளாறு ஏற்படும்.

*காலநிலை:* 'அக்னி' என்றழைக்கப்படும் செரிமானச் சக்தி, காலநிலைக்கேற்ப மாறுபடும். வெயில் காலத்தில் செரிமான சக்தி குறைவாக இருக்கும். இந்த நேரத்தில் எளிதாக ஜீரணமாகும் உணவு வகைகளை உண்ண வேண்டும். குளிச்சியான, எண்ணெய் கலந்த, நீர்த்த நிலையில் உள்ள, இனிப்பு சுவை கொண்ட உணவு வகைகள் நல்லது.

உதாரணம்: இளநீர், பழரசங்கள், அரிசிக் கஞ்சி ஆகியவை.

குளிர்காலங்களில் நமக்கு செரிமான சக்தி அதிகமாக இருக்கும். இந்தச் சக்திக்குத் தீனி போடும் வகையில் கடினமான உணவு வகைகளைச் சாப்பிடலாம்.

*எந்த நேரத்தில் சாப்பிட வேண்டும்:*

காலை நேரத்தில், சிறுநீர், மலம் கழித்த பின்னரே உணவு உட்கொள்ள வேண்டும். உணவுக்குடல் சுத்தமாக இருக்கும் வேளையில், இருதயம் லேசாக இருக்கும் நிலையில், நல்ல பசி எடுக்கும். இந்த நேரத்தில் சாப்பிட வேண்டும். மற்ற வேளைகளில், முதலில் சாப்பிட்ட உணவு செரித்த பிறகே அடுத்த உணவைச் சாப்பிட வேண்டும்.

ஒன்றோடு ஒன்று கலக்கக் கூடாத உணவு வகைகள்: புளிப்பு சுவையுடைய உணவு வகைகளுடன் பாலைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. பாலைப் பழத்துடன் சாப்பிடுவதும் நல்லதல்ல. தயிர் புளிக்காத வகையில் சாப்பிட ஆசைப்பட்டு, அதில் பாலை ஊற்றிச் சாப்பிடுவதும் தவறு தயிருடன் பழம் சாப்பிடக்கூாது. மீனுடன் பால் சாப்பிடக் கூடாது.

அரிசி, கோதுமை ஆகியவற்றை பிரதான உணவாக உட்கொள்ளலாம். நல்ல உணவு உட்கொள்ளும் மிருகங்களின் இறைச்சி, பிஞ்சு முள்ளங்கி, கடுக்காய், நெல்லிக்காய், திராட்சை, சுத்திகரிக்கப்படாத சர்க்கரை, நெய், தேன், மழைநீர், பால், பயறு, மாதுளம் பழம் ஆகியவை சாப்பிடுவது நல்லது.

உணவில் இனிப்பு, புளிப்பு, உப்பு, கசப்பு, காரம், துவர்ப்பு ஆகிய சுவைகள் நிறைந்திருக்க வேண்டும். மற்ற சுவைகளை விட இனிப்பு சுவை சிறிது கூடுதலாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் 'அனீமியா' ஏற்படாமல் உடல் பாதுகாக்கப்படும். எந்த உணவுமே சூடாகச் சாப்பிடவேண்டும். ஆனால், ஆறிய சமையலை மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடக்கூடாது.

*அடிக்கடி சாப்பிடக்கூடாதவை:*

தயிர், கறுப்பு உளுந்து, வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளின் இறைச்சி, மீன், முளைகட்டிய தானியங்கள் , உலர்ந்த காய்கறிகள், முற்றிய கிழங்கு வகைகள் இவற்றில் தயிரை எப்போதுமே இரவு நேரங்களில் சாப்பிடவே கூடாது. தினமும் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். சூடுபடுத்திச் சாப்பிடக்கூாது. குளிர்காலத்தில் மட்டுமே தயிரைச் சாப்பிடலாம்.

இப்படி சரியான உணவு வகைகளைச் சாப்பிட்டால், அனீமியா பாதிப்பிலிருந்து தப்பலாம். கலோரி அளவு, புரோட்டின் அளவு, கொழுப்பு அளவு ஆகியவற்றின் குறைபாட்டால் 'அனீமியா' ஏற்படுகிறது என்று கூறமுடியாதென டாக்டர்கள் தெரிவிக்கின்றன. எனவே, உணவு உண்ணும் முறை தான் நம் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டியது பெண்களுக்கு மிக மிக அவசியம்.

## சமைத்துச் சுவைப்போம்

### சவ்வரிசி தோசை



**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| சவ்வரிசி | -1கப் |
| பச்சைப் பட்டாணி | - 1/4கப் |
| உருளைக்கிழங்கு | - 2 |
| இஞ்சி | - சிறிது |
| வெங்காயம் | - 1 |
| பச்சமிளகாய் | - 3 |
| கறிவேப்பிலை | - சிறிது |
| உப்பு | -தேவையானளவு |

**செய்முறை:**– தோசை செய்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன் சவ்வரிசியை வெந்நீரில் ஊறவைக்கவும், பச்சை பட்டாணியை அரைத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கை வேக வைத்து மசித்து வைத்துக்கொள்ளவும். பிறகு, ஊற வைத்த சவ்வரிசியுடன் அரைத்த பட்டாணி மசித்த உருளைக்கிழங்கு, துருவிய இஞ்சி, கீறிய பச்சை மிளகாய், கறிவேப்பிலை, பொடியாக அரிந்த வெங்காயம், உப்பு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து தோசை ஊற்றுங்கள். சூடாகச் சாப்பிடல் சுவை அபாரமாக இருக்கும். தொட்டுக் கொள்ள தக்காளி சோஸ் போதுமானது.

# அபிவிருத்திப் பணிகளை முடக்கும் கிராம சேவையாளர் வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிலவுகின்ற கிராம சேவையாளர் வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாததால் அபிவிருத்திப் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என பிரதேச செயலகங்களால் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திப் புனர்வாழ்வு நடவடிக்கைகள் அனைத்தும் கிராம சேவையாளர்களினது பரிந்துரைகளுக்கு அமைவாகவே இடம் பெறும்.

இந்நிலையில் குறிப்பாக தென்மராட்சிப் பிரதேசத்தில் 60 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இதில் 37 கிராம சேவகர் பிரிவுகளில் மட்டுமே கிராம சேவை உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

ஏனைய 23 கிராம சேவையாளர்கள் பிரிவுகளும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாது வெற்றிடமாக உள்ளன.

இந்த நிலை காரணமாக போரினால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது பாரிய சிக்கல்கள் தோன்றியுள்ளன என்று தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (க)

## பாதிப்புற்றோருக்கு உதவி

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை முனைக் கிராமத்தில் நான்காம் கட்ட விநியோகத்திற்கு யாழ். மாவட்ட சர்வோதயத்தினால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை முனைக் கிராமத்திலுள்ள வாழ்வாதார அலுவலகத்தில் வைத்து கட்டுமரம், மீன்பிடி உபகரணங்கள், தையல் மெஷின்கள், தையல் மெஷின் உபகரணங்கள் ஆகியவற்றை யாழ்.மாவட்ட சர்வோதய இணைப்பாளர் இ.சிவசுப்பிரமணியம் வழங்கினார். (க-134)

# அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்ய நிதி இல்லை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்அமுல் செய்யப்படவில்லை என்றும் போதிய நிதி இல்லாமையினாலேயே திட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து நகரசபை எல்லைக்குள் இருக்கின்ற சமூக ஆர்வலர்கள் பெரும் அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர்.

நகரசபை எல்லைக்குட்பட்டிருக்கும் பதினொரு வட்டாரங்களிலும் வீதிகள் புனரமைப்பு, மின்சார விளக்குப் பொருத்துதல், வடிகால் அமைப்பு போன்ற பல வேலைகள் அவசியம் செய்யப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன.

ஆயினும் உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்குரிய நிதி வழங்கல்களை உரிய நேரத்தில் வழங்குவதில் தடங்கல்களும் தாமதங்களும் ஏற்பட்டு வருகின்றன.

இதேசமயம், சாவகச்சேரி நகரசபையின் அபிவிருத்திக்கான திட்டமொன்றினை தயாரிக்கும் முயற்சியில் தற்போதைய செயலாளர் திருமதி. குலமணி ஆறுமுகம் ஈடுபட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

## நிர்வாகிகள் தெரிவு

(நல்லூர்)

நாயன்மார் கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையத்தின் மாதர் சங்கத்துக்கான வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

இதன்படி தலைவராக இ.சிவசோதிமலரும், உபதலைவராக க.ஜெசிந்தாவும், செயலாளராக அ.சுசிலாவும், உப செயலாளராக ஜெ.றூபாதேவியும், பொருளாளராக சி.விஜிதாவும், செயற்குழு உறுப்பினர்களாக அ.மரீனா, தி.அனுஷா, ச.சசிறேகா, ஞா.தயாநிதி ,ந.சுகந்தி, நா.ஜெயசித்திரா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (க-134)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர்மன்ற ஒன்றுகூடல் நிகழ்வைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் அதிபர் எஸ்.சேதுராஜா, சிரேஷ்ட மாணவத் தலைவன் எஸ்.கம்சன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: பரு.நிருபர்)*

# சைக்கிள், மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதி மற்றும் யாழ்ப்பாண நகர் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர், மக்கள் பாவனையிலுள்ள சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளின் விபரங்களைத் திரட்டும் பணியினை ஆரம்பித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

தற்பொழுது முதற்கட்டமாக வடமராட்சியிலிருந்து ஏனைய பகுதிகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பயன்படுத்தும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களின் விபரங்களைப் பெறும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பஸ்ஸிற்காக வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வருவோர் தாம் நின்று பஸ் ஏறும் தரிப்பிடங்களுக்கு அருகிலுள்ள வீடுகளில் அல்லது கடைகளில் அவற்றைப் பாதுகாப்பாக தரிக்கவிட்டுச் செல்வது வழக்கம்.

இவ்வாறு பாதுகாப்பாக சைக்கிள் மோட்டார் சைக்கிள்கள் தரிக்க விடப்படும் இடங்களுக்குச் செல்லும் படையினர் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்களின் பெயர் விபரங்களை அவர்களிடமிருந்து பெற்றுத் தமக்கு ஒப்படைக்குமாறு வீடு மற்றும் கடை உரிமையாளர்களைப் பணித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (க-7,132,133)

## மருந்தகங்களில் திடீர் சோதனை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள மருந்தகங்களை நேற்று முன்தினம் திடீர் பரிசோதனை செய்தபோது இரு மருந்தகங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களை பிராந்திய உணவு மருந்துப் பரிசோதகர் மகாதேவன் கண்டு பிடித்தார்.

குறிப்பிட்ட இருமருந்தகங்களின் உரிமையாளர்களையும் யாழ்.நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது யாழ்.மாவட்ட நீதவான் இ.த.விக்னராஜா தலா 6 ஆயிரம் ரூபா வீதம் குற்றப் பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (க-132,133)

# சட்டவிரோத காணி அபகரிப்பை தடுக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணம் உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் இடம்பெற்று வரும் சட்டவிரோத காணி அபகரிப்பு நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு இலங்கை காணி அபகரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான கூட்டுத்தாபனம் புதிய நடவடிக்கைக் குழுவொன்றை நியமித்துள்ளது.

இந்தக் கூட்டத்தாபனத்தின் தலைவர் சோமவீர சந்திரசிறியின் தலைமையில் இந்தக் குழு செயற்படவிருக்கிறது.

நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், நகர்ப்புற அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும், பொலிஸாரும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

மேல் மாகாணத்தில் மட்டுமல்லாது ஏனைய மாகாணங்களிலும் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத காணி அபகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் புகார்களை இந்தக் குழுவிடம் தெரிவிக்குமாறு பொது மக்களிடம் மேற்படி குழு கேட்டுள்ளது.

'சட்டவிரோத காணி அபகரிப்புக்களைத் தடுக்கும் நடவடிக்கைக் குழு', 'இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிரு த்திக் கூட்டுத்தாபனம்' 'ஸ்ரீ ஜயவர்த்தன புர மாவத்தை', 'வெலிக்கடை', 'ராஜகிரிய' என் னும் முகவரி யுடன் மக்கள் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவிரும்புவோர் 2863705 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## கண்காட்சி

(பருத்தித்துறை)

சுவாமி விவேகானந்தர் பற்றிய கண்காட்சி இன்று கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.வாம தேவன் கண்காட்சியை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதாசேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (க-52)

## பிரசாரக் கூட்டம்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் சாவகச்சேரி நகரசபைக்கான தேர்தல் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் இலங்கை தமிழரசு கட்சியின் முதலாவது பிரசார கூட்டம் சாவகச்சேரி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நாளை சனிக்கிழமை நடைபெறும் என்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராசா ரவிராஜ் அறிவித்துள்ளர்.


இதேவேளை கொடிகாமம் பிரதேச சபைக்கான தேர்தல் பிரசார கூட்டம் நாளை கொடிகாமம் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (க-108)

# சட்டவிரோத மது விற்பனையை தடுக்க விழிப்புக்குழு அமைப்பு

ஆவரங்கால் மேற்கில் நீண்ட நாட்களாக இயங்கி வந்த சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்களை கண்டறிந்து மூடுவதற்காக ஆவரங்கால் மேற்கு கிராம சேவையாளர் கணேசலிங்கத்தினால் விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவின் தலைவராக ம.ரங்கநாதன் தெரிவு செய்யப்பட்டு அவர் தலைமையில் இருபது பேர் விழிப்புக் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விழிப்புக் குழு அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆவரங்கால் பகுதியில் சட்ட விரோத சாராய விற்பனைகளை உடன் நிறுத்துமாறு கோரி விழிப்புக் குழுவினரால் துண்டுப் பிரசுரங்கள் வீதிகள் தோறும் ஒட்டியுள்ளதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. (க-134)




வடமராட்சி லயன்ஸ் கழகம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்திய இலவச வைத்திய சிகிச்சை முகாமிலே லயன் எஸ்.தணிகாசலம் உரையாற்றுவதையும், வைத்திய கலாநிதி எஸ்.ஜெயராஜா, வைத்திய கலாநிதி எம்.தங்கராஜா உட்பட லயன்ஸ் உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

*(படம்: பரு.நிருபர்)*

# உதிரிக் கட்சிகளுடன் தேர்தலை சந்தித்தால் வெற்றி கிட்டுமா?

## தேர்தல் நெருங்க நெருங்க அ.தி.மு.க. கவலை

உதிரிக் கட்சிகளின் உதவியுடன் வலுவான கூட்டணியை எப்படி எதிர்ப்பது என்று கவலை அ.தி.மு.க. தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், விஜயகாந்த் கட்சியைக் கூட்டணிக்குக்கொண்டு வர தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேசிய அரசியலில் ஆதரவைப் பெற பா.ஜனதாவையும் அரவணைத்துச் செல்லும்படி அ.தி.மு.க தலைமைக்கு ஆலோசனை சொல்லப்பட்டுள்ளது.

தேர்தல் நெருங்க நெருங்க களத்தில் நிற்கும் பிரதான அணிகள் எவை என்பது சாதாரண மக்களின் கண் முன்னே ஓரளவு இறுதி வடிவம் பெற்று வருகிறது. நான்கு முனைப் போட்டி என்பதைப் போன்ற தோற்றம் தென்பட்டாலும் உண்மையான போட்டி தி.மு.க அணிக்கும் அ.தி.மு.க அணிக்கும் இடையே தான் இருக்கப் போகிறது என்பது தெளிவாகி வருகிறது.

வரப்போகும் சட்டசபை பொதுத் தேர்தலுக்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தி.மு.க. வியூகம் வகுத்தது. எதிர்க்கட்சிகளாக இருக்கும் அனைத்துக் கட்சிகளையும் தன் பக்கம் இழுத்து வலுவான ஏழு கட்சிக் கூட்டணியை தி.மு.க உருவாக்கியது. அந்தக் கூட்டணி வலுவானது தான் என்பதைக் கடந்த 2004ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தின. அதன்பிறகு கூட்டணியைக் கட்டுக்கோப்பாக சட்டசபைத் தேர்தலுக்குக் கொண்டு செல்வதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் தி.மு.க தலைவர் கருணாநிதி எடுத்தார். பா.ஜவுடன் கூட்டணி வைத்திருந்த அ.தி.மு.க, சங்கராச்சாரியார் விவகாரத்தில் மூக்கை நுழைத்ததால் அந்த இரண்டு கட்சிகளுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரியும் நிலை ஏற்பட்டது. இதன்மூலம் தனிமரமாக விடப்பட்ட அ.தி.மு.க சட்டசபை பொதுத்தேர்தலை எப்படி சந்திக்கப்போகிறது? என்ற கேள்வி அனைத்து தரப்பிலும் எழுந்தது.

நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி தந்த பாடத்தால் ஆளுங்கட்சி ஆட்சிக்கு வந்ததும் எடுத்த அதிரடி நடவடிக்கைகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டன. இருந்தாலும் தி.மு.க கூட்டணியைச் சமாளிப்பது சற்றுச் சிரமமான விஷயம் தான் என்ற கருத்து இருந்து வந்ததால், தி.மு.க கூட்டணியை உடைப்பதுதான் ஒரே வழி என்று முடிவெடுத்து களமிறங்கியது ஆளுங்கட்சி. ஏழு கட்சிக் கூட்டணியை ஆறு கட்சிக் கூட்டணியாக மாற்றியுள்ளது தான் ஆளுங்கட்சிக்கு கிடைத்த சிறிய வெற்றி மிகக் குறைந்தளவு சேதாரத்துடன் சுதாரித்துக்கொண்ட தி.மு.க தலைமை கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிகளை வாரி வழங்கி கூட்டணியைத் தக்க வைத்துக்கொண்டுவிட்டது.

ஆட்சியைப் பிடிக்கும் கனவுடன் களமிங்கியுள்ள நடிகர் விஜயகாந்த், அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்து பெரிய கட்சிக்கு சவாலாக இருக்க விரும்பாததால் அ.தி.மு.க, தே.மு.தி.க கூட்டணி ஏற்படுவதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் விஜயகாந்தை கூட்டணிக்கு இழுப்பதற்கான முயற்சியை ஆளுங்கட்சி கைவிடவில்லை. தேசியக் கட்சியான காங்கிரஸ் எதிரணியில் இருக்கும் நிலையில் மற்றொரு கட்சியான பா.ஜ.வையும் ஒதுக்கி வைப்பது நல்லதல்ல என்று அ.தி.மு.க தலைமைக்கு டில்லி வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டு விட்டதால் தற்போதைய சூழ்நிலையில் தி.மு.க அணி, அ.தி.மு.க அணி, தே.மு.தி.க, பா.ஜ. என நான்குமுனைப் போட்டி என்று சொல்லும் அளவுக்கு தேர்தல் களம் காட்சியளிக்கிறது. இருந்தாலும் உண்மையான போட்டி தி.மு.க அணிக்கும் அ.தி.மு.க அணிக்குமிடையில் தான் இருக்கப் போகிறது என்பது நிதர்சனமான உண்மை.

கட்சிகளின் வாக்குச் சதவீதம் தான் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கப் போகிறது என்பது பெரும்பாலானவர்களின் கருத்தாக இருப்பதால் அதைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஆளுங்கட்சி அணிக்கு ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.க அணியில் ம.தி.மு.க விடுதலைச் சிறுத்தைகளைத் தவிர்த்து சொல்லும்படியான வேறு கட்சிகள் இடம்பெறவில்லை. ஒரு சீட் பெறுவதற்கு மட்டுமே தகுதி உடைய கட்சிகள் அந்தக் கூட்டணியில் இடம் பெற்றிருப்பது அந்தக் கூட்டணிக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு என்றே கூறப்படுகிறது. கடந்த 2001 ஆம் ஆண்டு ஜாதிக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தி.மு.க. செய்த தவறை இந்த முறை அ.தி.மு.க செய்கிறது என்ற எண்ணம் பொதுமக்கள் மத்தியில் பரவத் தொடங்கியுள்ளது.

அரசு ஊழியர்களைப் பொறுத்தமட்டில் அ.தி.மு.க ஆட்சிக்கு வந்ததும் விழுந்த அடியை அவர்கள் இன்னும் மறக்க முடியாமல் தவிக்கின்றனர். பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவை அனைத்தும் நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியின் எதிரொலியாகவும் வரவுள்ள சட்டசபைத் தேர்தலில் அரசு ஊழியர்களைச் சமாதானப்படுத்துவதற்காகவும் ஆளுங்கட்சி எடுத்த நடவடிக்கையாகவே அரசு ஊழியர்கள் கருதுகின்றனர். மதமாற்ற தடைச் சட்டம் உள்ளிட்ட விஷயங்கள் ரத்துச் செய்யப்பட்டாலும், பா.ஜ போன்ற கட்சிகளுடன் இடைவெளியை ஏற்படுத்திக்கொண்டாலும் அ.தி.மு.க ஒரு இந்து ஆதரவுக் கட்சி என்ற எண்ணம் சிறுபான்மை மக்கள் மத்தியில் இன்னமும் இருந்து வருகிறது. இவை அ.தி.மு.க அணிக்கு பின்னடைவையே ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. ம.தி.மு.க.வின் திடீர் அணி மாற்றத்தை இரண்டு கட்சி தொண்டர்களும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டாலும் எந்தக் கட்சியையும் சாராத மக்கள் மத்தியில் சலசலப்பையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிருப்தி தேர்தல் முடிவில் எதிரொலிக்க வாய்ப்பு இருப்பதாகவே கூறப்படுகிறது.

இலவச சைக்கிள், உழவர் பாதுகாப்புத் திட்டம், வெள்ள நிவாரணம் ஆகியவை ஆளுங்கட்சிக்கு வாக்குக்களை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால், அதைச் சமாளிப்பதற்குத் தேவையான ஆயுதங்களை எடுக்க தி.மு.க. அணி தயாராகி வருகிறது வெள்ள நிவாரண மரணத்தை முன்வைத்து பிரசாரம் செய்ய அந்த அணி திட்டமிட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தேர்தல் நேரத்தில் வழங்கப்படும் கடன் தொகை குறிப்பிடத்தக்க வாக்குகளைப் பெற்றுத்தரும் என்று அ.தி.மு.க கருதுகிறது. அதை முறியடிக்கவும் தி.மு.க திட்டமிட்டு பிரசார உத்திகளை மேற்கொள்ள தொடங்கியுள்ளது. தி.மு.க தரப்பிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் எந்த அணியின் முயற்சி தேர்தல் களத்தில் வெற்றியடையப் போகிறது என்பது தேர்தல் முடிவுகள் வரும்போது வெளிச்சத்துக்கு வரும்.

இன்னும் இழுபறி: அ.தி.ம.க கூட்டணியில் இடம்பெற்றுள்ள திண்டிவனம் ராமமூர்த்திக்கு இன்னும் தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. அந்தக் கட்சிக்கு மூன்று தொகுதிகள் மட்டுமே ஒதுக்க அ.தி.மு.க முன் வந்துள்ளது. ஆனால் திண்டிவனம் ராமமூர்த்தி இரட்டை இலக்கத்தில் தொகுதிகள் கேட்பதால் இழுபறி ஏற்பட்டுள்ளது. இலட்சிய தி.மு.க வுக்கும் தொகுதி ஒதுக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பத்து தொகுதிகள் ஒதுக்காவிட்டால் தனித்துப் போட்டியிடுவது என டிராஜேந்தரின் கட்சி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. திருமாவளவனுக்கு ஒன்பது இடங்கள் கொடுத்துவிட்டு இந்தியக் குடியரசு கட்சிக்கு ஒரு இடமே கொடுக்க முன்வந்ததால் செ.கு.தமிழரசன் அ.தி. மு.க தலைமை மீது கடும் கோபத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதேபோன்று பா.ம.கவுக்கு எதிராக அரசியல் நடத்திவரும் ஏ.கே.நடராஜன், தீரன், சி.என்.ராமமூர்த்தி, பு.தா.இளங்கோவன் ஆகியோருடனும் எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. இதனால் அந்த அமைப்புக்களும் கடும் அதிருப்தியிலிருந்து வருகின்றன. நடிகர் கார்த்திக் தொடர்ந்து முயற்சித்தும் அவருக்கு அ.தி.மு.க பச்சைக் கொடி காட்டாததால் இழுபறி நீடிக்கிறது. (து)

இந்திய வலம்

## எந்தக் கட்சிக்கும்
# ரஜினியின் ஆதரவு இல்லை
### அ.இ.ரஜினிகாந்த் ரசிகர் மன்றம் அறிக்கை

(சென்னை)

தமிழகத்திலும், புதுச்சேரியிலும் தேர்தல்கள் வரும்போதெல்லாம், அது சட்டமன்ற தேர்தல் ஆனாலும் சரி, பாராளுமன்ற தேர்தல் ஆனாலும் சரி ரஜினிகாந்த் ஆதரவு யாருக்கு என்று எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுவது வழக்கம்.

ரஜினிகாந்த் ஆதரவு யாருக்கு என்று அவர் தெரிவிப்பதற்கு முன்பாகவே சில ரசிகர்கள் ரஜினிகாந்த் இவருக்கு நண்பர், அவருக்கு எதிரி, இவருக்கு ஆதரவு, அவருக்கு ஆதரவு இல்லை என்று சுவர் விளம்பரம் எழுதுவது, போஸ்டர் அடிப்பது, இதைப் பற்றி விவாதிப்பதற்காக கூட்டம் போடுவது, பேட்டியளிப்பது போன்றவற்றைச் செய்வது தலைமை மன்ற கவனத்திற்கு வந்துள்ளது என அகில இந்திய ரஜினிகாந்த் ரசிகர்கள் நற்பணி மன்ற பொறுப்பாளர் சத்திய நாராயணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''ரஜினிகாந்த் யாருக்கும் எதிரி அல்ல. அவருக்கும் யாரும் எதிரி இல்லை. ரஜினிகாந்த் தற்பொழுது 'சிவாஜி' படப்பிடிப்பில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். ஆகையால் வரும் தேர்தலில் அரசியல் சம்பந்தமாக எந்த அறிக்கையும் அவரிடமிருந்து வராது. அவர் அரசியல் பற்றிப் பேசவும் மாட்டார் என்பதை ரஜினிகாந்த் ஒப்புதலுடன் தலைமை மன்றம் தெரிவிக்கிறது.



ரஜினிகாந்தின் அன்பு ரசிகர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் உறுப்பினர்களாகவும், ஆதரவாளர்களாகவும் இருப்பது நீங்கள் அறிந்ததே. உங்கள் ஆதரவைத் தனிப்பட்ட முறையில் உங்கள் விருப்பப்படி தெரிவித்துக்கொள்ளலாம். இது உங்களது உரிமை ஆகும்.

ஆனால் ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றம் என்ற பெயரிலோ, ரஜினிகாந்த் ரசிகர் என்ற பெரிலோ, ரஜினிகாந்த் இவருக்கு எதிரி, அவருக்கு நண்பன், இவருக்கு ஆதரவு, அவருக்கு ஆதரவு இல்லை என்றெல்லாம் மன்றம் சார்பில் கூட்டம் போட்டு விவாதிப்பது போஸ்டர் அடிப்பது, பிட்நோட்டீசு அடிப்பது, சுவர் விளம்பரம் எழுதுவது, சுயேச்சை வேட்பாளர்களை மன்றம் சர்பில் நிறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்று தாழ்மையுடன் தலைமை மன்றம் கேட்டுக்கொள்கிறது. இதை மீறுபவர்கள் மன்றத்திலிருந்து கண்டிப்பாக நீக்கப்படுவார்கள் என்பதைத் தலைமை மன்றம் தெரிவித்துக்கொள்கிறது. (து)

# ஆடிட்டர் தாக்கப்பட்ட வழக்கை புதுச்சேரிக்கு மாற்ற நீதிபதி மறுப்பு

(சென்னை)

ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கில் காஞ்சி மாடதிபதி ஜெயேந்திரர், இளைய மாடதிபதி விஜயேந்திரரின் தம்பி ரகு, அப்பு உட்பட 12 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது இதில் காண்டிராக்டர் ரவி சுப்பிரமணியம் அப்ருவராக மாறினார்.


இந்த வழக்குச் சென்னை முதலாவது கூடுதல் செசன்சு கோர்டில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கைப் புதுச்சேரி கோர்ட்டுக்கு மாற்ற வேண்டும் என்று ஜெயேந்திரர் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

ஏற்கனவே, சங்கரராமன் கொலை வழக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் புதுச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளதால், ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கையும் புதுச்சேரிக்கு மாற்ற வேண்டும் என்று மனுவில் அவர் கூறியிருந்தார். இரு வழக்குகளிலும் குற்றவாளிகள், சாட்சிகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையவை என்றும் மனுவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி எம்.ஜெயபால் ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கை புதுச்சேரிக்கு மாற்ற முடியாது என்று தீர்ப்புக் கூறினார்.

சங்கரராமன் கொலை வழக்கில் 370 சாட்சிகள் உள்ளனர். அங்கு இவர்கள் விசாரிக்கப்பட உள்ளனர். ஆனால் ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கில் 81 சாட்சிகள் மட்டுமே உள்ளனர். இந்த 81 சாட்சிகளும் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ளனர். இவர்கள் புதுச்சேரிக்குச்சென்று சாட்சியம் அளிப்பது கஷ்டமாக இருக்கும். இரு வழக்குகளும் ஒன்றுக்கு ஒன்று தொடர்வுடையது என்று கூறுவதை ஏற்க முடியாது. இரு வழக்குகளும் தனித்தனியாகப் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டவை. இந்த இரு வழக்கையும் புதுச்சேரி கோர்ட்டே விசாரித்தால் வேலைப் பழு அதிகமாகும். இதனால் கால தாமதம் ஏற்படும்.

எனவே, ஆடிட்டர் ராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கை புதுச்சேரி கோர்ட்டுக்கு மாற்றத் தேவையில்லை எனத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (து)



மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் மேற்கு வங்க காங். தலைவர் அதிபர் சௌத்ரி, கொல்கத்தாவில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.




# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

76 மீள்பார்வை



அவர்களும் சரி சென்று வாருங்கள் என்றனர். ஆனால் 'வேறு இடம் எங்கேயும் செல்லவேண்டாம்... சீக்கிரம் திரும்பி வந்து விடுங்கள்' என்றும் கூறினார்கள்.

உடனே நான் சிங்கப்பூர் சென்றேன். போகிற வழியிலேயே நான் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். மீண்டும் டாக்டர்கள் என்னைத் தூக்கிக் கொண்டு விட்டார்கள். மறுநாள் மாலை சிங்கப் பூரில் பெரிய கலைநிகழ்ச்சி. கங்கை அமரன் ட்ரூப் பாடுகிறார்கள். நமது தமிழ்த் திரைப்பட ஆர்ட்டிஸ்டுகளெல்லாம் கூடியிருக்கிறார்கள். நானும் சென்றிருக்கிறேன். என்னைக் கடைசியாக இரவு பத்து மணிக்குத் தான் அழைத்தார்கள்.

என்னை நடத்திக் கூட்டிச் செல்லாமல், ஒரு டிராலியில் வைத்து மேடையில் ஒரு ரவுண்டு விட்டார்கள். பின் மெல்லக் கைத்தாங்கலாகக் கொண்டு சென்றார்கள். அப்போது நமது இந்தியன் அம்பாஸிடர் என்னை கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு சென்று, நாற்காலியில் உட்கார வைத்தார்.



'செவாலியே' விருது

அப்போது நான் பேசினேன். 'எனக்கு உடல்நலமில்லை. எழுந்து போவதற்குக் கூட சக்தியில்லை. என்னை மன்னித்து விடுங்கள். இன்னொரு சமயம் உங்கள் நாட்டிற்கு வந்து பல மணி நேரம் உங்களுடன் இருக்கிறேன். நீங்கள் என்னென்ன பேசச் சொல்கிறீர்களோ பேசுகிறேன். டான்ஸ் ஆடுகிறேன். பாட்டுப் பாடுகிறேன். ஆனால், இந்தத் தடவை என்னை மன்னித்து விடுங்கள்' என்று கூறிவிட்டு மயங்கிக் கீழே விழுந்துவிட்டேன்.

ஒரு பெரிய ஹார்ட் அட்டாக் வந்து விட்டது. எனக்கே தெரியாது. அப்படியே தூக்கிக் கொண்டு சென்று, ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்கள். மூன்று நாள் கழித்துத்தான் கண்விழித்தேன். சிங்கப் பூரில் டி.டி.துரை என்று ஒருவர் இருக்கிறார். அவர் எங்கள் வீட்டுப் பிள்ளை மாதிரி. அவர் நேஷனல் கிட்னி பௌன்டேஷன் (National Kidney Foundation) தலைவர். அவர்தான் God Father போல் கிட்ட நின்று, என்னை உயிர் பிழைக்க வைத்தவர். அவரை என் வாழ் நாளில் மறக்கவே முடியாது.'

இச்சம்பவத்தால் நான் மேலும் சிங்கப்பூரில் பிரபலமாகிவிட்டேன். நமது மக்கள் என்னைப் பார்ப்பதற்காக, கூட்டமாக செக்யூரிட்டியைத் தள்ளிக்கொண்டு, ஆஸ்பத்திரிக்குள்ளே வருவார்கள். தமிழர்கள் எல்லோரும் கோவில்களுக்குச் சென்று பூஜை செய்து, நிறைய பிரசாதம் கொண்டு வந்து அறை முழுவதும் வைத்திருந்தார்கள். நான் வெளியே வரும்போது பார்த்தால் பூவும், தேங்காய் மூடியும் பூச்செண்டுகளாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இதனால் ஆஸ்பத்திரிக்கு நான் ஒரு பெரிய ப்ராப்ளமாகி விட்டேன்.

சிங்கப்பூர் அரசாங்கமே என்னை 'இந்தியாவுக்குச் செல்லுங்கள்' என்று கூறிவிட்டார்கள். உடனே எனது டாக்டர்கள் என்னை டெம்பரரியாக ரிப்பேர் செய்து, இந்தியாவுக்கு அனுப்பினார்கள். ஆகவே, இரவோடு இரவாக இந்தியாவந்து சேர்ந்தேன். இதன்பிறகு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக, சில வருடங்கள் கழித்து மீண்டும் சிங்கப்பூர் சென்றேன்.

அங்கே சென்று நான் மக்களிடம் ' பல வருடங்களுக்கு முன்னால், நான் இங்கு மயங்கி விழுந்துவிட்டேன். அப்போதே நான் இறந்திருப்பேன். உங்களது பிரார்த்தனையும், என் மனைவியுடைய மாங்கல்ய பலமும்தான் என்னைக் காப்பாற்றியது.



'செவாலியே' விருது வழங்கும் விழாவில்...

நான் உங்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இப்போது மீண்டும் உங்களது முன்னால் வந்துவிட்டேன் என்று கூறினேன். உடனே அத்தனை பேரும் எழுந்து மகிழ்ச்சி ஆரவாரத்தோடு கைதட்டினார்கள். இதைவிட, எனக்கு என்ன பெருமை வேண்டும்?

### புகழ் பெற்ற விருதுகள்

டி.எஸ்.என்: கிட்டத்தட்ட முந்நூறு படங்கள் நடித்துள்ளீர்கள். அவற்றில் பல தேசிய விருதுகள் பெற்றவை. அப்படியிருந்தும் தேசிய அளவில் ஒரு சிறந்த நடிகன் என்ற பரிசு உங்களுக்கு ஏன் கொடுக்கப்படவில்லை?

சிவாஜி: மற்றவர்களுக்குக் கொடுத்தார்கள். உங்களுக்கு ஏன் கொடுக்கவில்லை? என்று கேட்கிறீர்கள். அரசியலாக இருந்தாலும் சரி, கலை போன்ற வேறு துறையாக இருந்தாலும் சரி. ஒரு ரெகக்னிஷன் வேண்டுமென்றால் ஒரு லாபி செய்ய வேண்டும் என்ற நிலை நம் நாட்டில் உள்ளது. அது எனக்குப் பழக்கமில்லை.

அரசாங்கமே பார்த்து அவர்களாகவே பட்டமோ, பதவியோ கொடுத்தால் மட்டுமே நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இல்லையென்றாலும் அதைப் பற்றி நான் கவலைப்பட்டதில்லை. எப்பொழுதுமே மக்கள் என்னை பாராட்டினார்கள். பெருமைப்படுத் தினார்கள். என் நடிப்பிற்கு அவர்களிடமிருந்து எனக்கு ரெகக்னிஷன் கிடைத்தது. அதுவே எனக்கு மாபெரும் விருது.

டி.எஸ்.என்: நீங்கள் எதிர்பாராமலேயே பிரான்ஸ் நாடு உங்கள் நடிப்புத் திறமையைப் பாராட்டி 1995இல் உங்களுக்கு உலகத்திலேயே பெருமதிப்பிற்குரிய 'செவாலியே' விருதைக் கொடுத்தார்கள். அந்த அனுபவம் பற்றி நீங்கள் கூறுவது...

சிவாஜி: பிரான்ஸ் நாட்டில் வருடா வருடம் மிகச் சிறந்த நடிகனுக்கு அவார்டு கொடுப்பது வழக்கம். அதுதான் செவாலியே அவார்டு (Chevalier Award) இது மிக உயர்ந்த அவார்டு. ஆறு நீதிபதிகள் என்னுடைய 30 படங்களைப் பார்த்துவிட்டு, சிவாஜிக்குத் தான் அவார்டு கொடுக்க வேண்டுமென்று, முடிவு செய்து என்னைப் பற்றிய முழு விபரங்கள் சேகரிக்க, பாண்டிச்சேரி அரசுடன் தொடர்புகொண்டுள்ளார்கள். பாண்டிச்சேரியில் அவர்களால் விவரங்களைச் சரியாகக் கொடுக்க முடியவில்லை. தட்டிக்கழித்து விட்டார்கள்.

(தொடரும்)



## தவக்கால சிந்தனை

### 'ஆண்டவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள்'

தோட்டத்தின் கனிகள் உரிமையாளருக்குத்தானே. தோட்டத்திலிருந்து கனிகளை அவர் எதிர்பார்ப்பதும், கண்காணிக்கும் பணியாளர் நம்பிக்கைக்குரிய விதத்தில் கனிகளை ஒப்படைக்கவேண்டும் என்பதும் நியாயம்தானே! 'மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்' என்னும் உயரிய நோக்குடன் தவக்காலம் தொடங்கிய நாம் நமது மனமாற்றத்தை கடவுளுக்கான கனிகளை வழங்குவதில் எண்பிக்க வேண்டியிருக்கிறது. வரலாற்றில கடவுளைப் புறக்கணித்தனர். கடவுள் அனுப்பிய இறைவாக்கினர்களை இறுதியில் இறைவன் அனுப்பிய அவரது ஒரே திருமகனை புறக் கணித்தனர். ஆனால் புறக்கணிக்கப்பட்ட இந்த மெசியாதான் மீட்பின மூலைக் கல்லாக் உயர்த்தப்பட்டார் என்பதும் வரலாறே! அவர் ஏழையாக கைவிடப்பட்டவராக தோன்றினாலும் அவர் வழியாகவே மீட்பும் புதுவாழ்வும் பொங்குகின்றன என்பதை நம் உள்ளங்கள் கண்டு புத்துணர்வு பெறட்டும்.

காவலன்

## மின்சாரம் வழங்க நடவடிக்கை!

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கையில் இலங்கை மின்சாரசபை ஈடுபட்டுள்ளது. இதற்கமைய ஏ-9 பாதைகளில் பாரிய மரங்கள் தறிக்கப் பட்டு பளையிலிருந்து தர்மங்கேணி வரை மின்சார வயர்கள் இணைக் கப்பட்டு வருகிறது.

புதுக்காட்டு வழியாக மருதங்கேணிக்கு முதல் கட்டமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-35)


## யாழ்ப்பாணம்-மாநகரசபை.

### குருநகர் சந்தைக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்-2006

மாநகரசபைக்கு சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப் பங்கள் யாழ். மாநகரசபை ஆணையாளரால் 22.03.2006 ஆம் திகதி புதன்கிழமை பி.பகல் 1.00 மணிவரை ஏற்றுக்கொள் ளப்படும்.

குறித்த கடைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 22.03. 2006 ஆம்திகதி புதன்கிழமை காலை 11.00 மணிவரை என்னால் வழங்கப்படும்.

1)கேள்விப் பிணைப்பணம் -ரூபா 3000/- வும்
2)கேள்விப் பத்திரப் பணம் -ரூபா 200/- வும்
வற்வரி -ரூபா 30/- வும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரம் பெறுவதற்கு அலுவலகம் வரும்போது உரியவர் தமது தேசிய அடையாள அட்டையை உடன்கொண்டு வருதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் உறையில் இடப்பட்டு, ஒட்டப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு உறையின் மேல் பகுதியில் தாங்கள் தெரிவு செய்யும் கடை இலக்கம் குறிப்பிடப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிடப்பட்டு அலுவலகத்தில் இதற் கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் அலுவலக நேரங்களில் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள் ளலாம்.

தங்களால் கோரப்படும் கேள்விக்கு மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரியும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

| கடைகள் விபரம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக்குறைந்த கேள்வித் தொகை பெறுமதி சேர் வரி (வற்)தவிர்த்து | மாதவாடகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 1.மேல்தளக் கடைகள் 25தொடக்கம் 82வரை (58) | 18 000/- | 300/- |
| 2.கீழ்தளம் வெளிப்புறம் 10,12, (02) | 30 000/- | 500/- |
| 3.கீழ்தளம் உட்புறம் 24,23,33,19,18 (05) | 30 000/- | 500/- |

குறிப்பு:- கடைகள் யாவும் தற்போது இருக்கும் நிலையில் குத்தகைக்கு விடப்படுகின்றது. சித்தி பெற்றவர்கள் மேற் கொண்டு திருத்தங்கள் செய்தல் வேண்டும்.

கடை ஒப்படைக்கப்பட்டு 3மாதங்களுக்குள் திறக்கப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்க வேண்டும். தவறுமிடத்து திரும்ப குறிப்பிட்ட கடைகளுக்கு கேள்வி விண்ணப்பம் கோரப் படும்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15.03.2006

சீ.வி.கே.சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்.மாநகரசபை.

(C/230)

# தீவிரவாதிகளை அழிப்பதற்கென ஈராக்கிற்கு கூடுதல் படையினர்

## அனுப்பி வைக்கப்படும் என்கிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

ஈராக்கில் இருக்கும் அமெரிக்க இராணுவம் இன்னும் 2 ஆண்டுகளில் முழுமையாக வெளியேறும் என்று முன்பு அமெரிக்கா அறிவித்தது.

ஆனால்-நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருக்கிறது. இதனால் அமெரிக்க இராணுவம் அங்கு நீண்ட காலம் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஈராக்கில் இப்போது தீவிரவாதிகள் தாக்குதல் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு தீவிரவாதிகள் உள்ளே புகுந்து அமெரிக்க படைக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள் நாடுமுழுவதுமே தீவிரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.

அமெரிக்க இராணுவம் ரோந்து செல்லும்போது திடீரென தீவிரவாதிகள் தற்கொலைப் படையினர் அவர்கள் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி நிலை குலைய செய்கின்றனர்.

இதனால் அமெரிக்க வீரர்கள் உயிர் இழப்பது அதிகரித்து வருகிறது. அவர்கள் முகாம்களில் முடங்கி கிடக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஈராக்குக்கு கூடுதல் படையை அனுப்ப அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக 650 வீரர்களை கூடுதலாக அனுப்பிவைக்கிறது. ஏற்கனவே அமெரிக்கா ஈராக்கின் பக்கத்து நாடான குவைத்தில் படைகளை நிறுத்தி வைத்துள்ளது. அங்கிருந்து 650 பேரும் ஈராக்குக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் ஈராக் அரசு பாதுகாப்புப் படைகளுடன் சேர்ந்து பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவார்கள்.

ஈராக்கில் தற்போது ஒரு இலட்சத்து 33 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

WORLD NEWS உலக தரிசனம்



ஈராக் நகரான பாஸ்ராவில் நடந்த குண்டு வீச்சில் சேதமடைந்த பிரிட்டிஷ் ராணுவ டாங்க்

# இந்தியாவுக்கு அணுசக்தி எரிபொருள் ரஷ்யாவின் முடிவுக்கு அமெரிக்கா எதிர்ப்பு

(வாஷிங்டன்)

இந்தியாவில் உள்ள தாராப்பூர் அணுமின் நிலையத்துக்கு மிகவும் அவசரமாக தேவைப்படும் அணுசக்தி எரிபொருளை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. அணுமின் உற்பத்திக்குத் தேவையான 60தொன் யுரேனிய எரிபொருளை இந்தியாவுக்கு ரஷ்யா சப்ளை செய்யும் என்று தெரிகிறீது.

இதேவேளை, ரஷ்யப் பிரதமர் மிகையில் பிரட்கோவ் நேற்று வியாழக்கிழமை இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு இது தொடர்பாக இந்தியா-ரஷ்யா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகத் செய்தி தொடர்பாளர் நவ்தேஜ் சர்னா தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் இந்தியாவுக்கு அணு சக்தி எரிபொருளை வழங்க ரஷ்யா முடிவு செய்திருப்பதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது. இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஆடம் எரிலி கூறியதாவது.

இந்தியாவுக்கு எரிபொருள் தேவை என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க அணு சக்தி ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியா மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை நிறைவேற் றியபின்னர் தான் ரஷ்யாவிடம் இருந்து அணுசக்தி எரிபொருளை வாங்க முடியும் என்றார். (கு)

# மியான்மரில் அடக்குமுறை ஆட்சி; கொண்டோலிசா ரைஸ் விசனம்

(ஜகார்த்தா)

மியான்மர் மக்கள் வெளி உலகத்துடன் தொடர்பு ஏற்படாவண்ணம் அந்நாட்டு அரசு இரும்பு கரம் கொண்டு அடக்கி வரு



கிறது. இதுபோன்ற இராணுவ அடக்குமுறையை கண்டும் காணாதது போல் இருக்க முடியாது என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டோலிசா ரைஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டோலிசா ரைஸ் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக இந்தோனேசியா சென்றுள்ளார்.

ஜகார்த்தாவில் நேற்று முன்தினம் நடந்த சர்வதேச விவகாரங்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசுகையில்,

மியான்மர் நாட்டில் 1990ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆங்சான் சூகி தலைமையிலான ஜனநாயக தேசிய முன்னணிக் கட்சி பெரும் வெற்றிபெற்றது. அப்படி இருந்த போதும் ஆங்சான்சூகியை மியான்மர் இராணுவ அரசு வீட்டுக்காவலில் வைத்துவிட்டு இரும்புக்கரம் கொண்டு அந்நாட்டின் அரசை நிர்வகித்து வருகிறது.

சமீபத்தில் மியான்மர் நாட்டின் தலைநகர் யாங்கூனில் இருந்து 320 கி.மீ.வடக்கில் உள்ள பின்மானா என்ற நகருக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் மியான்மர் அரசு அமைப்பு ரீதியாக நாட்டை பின்னோக்கிக்கொண்டு செல்கிறது. மியான்மர் மக்கள் வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள முடியாதவாறு அவர்களின் எதிர்காலத்தை பறித்து வருகிறது.

கடந்த 15ஆண்டுகளாக மியான்மர் இராணுவ அரசு மக்களின் ஜனநாயக எண்ணங்களுக்கு சிறை போட்டு மூடிவைத்துள்ளது.

தென் கிழக்கு ஆசிய நாட்டின் வைரம் என்று முன்பு கருதப்பட்ட மியான்மர் இந்த பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுக்கு கிடைத்துவரும் நவீன மாற்றங்களை உணர்ந்து பருகிட முடியாத நிலையில் உள்ளது.

மிகப்பெரிய ஜனநாயக நாடுகளான இந்தோனேசியா மற்றும் அமெரிக்கா ஆகியவை இதுபோன்ற அடக்குமுறை ஆட்சிகளை கண்டும் காணாதது போல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என எச்சரிக்கிறேன் என்றார். (கு)



இந்தோனேஷியாவில் அதிபர் பாதுகாப்பிற்காக இருக்கும் பாதுகாப்பு படையில் உள்ள பெண் வீரர்கள் ஒத்திகையில் ஈடுபட்டனர்.

# 'ஷியா முஸ்லிம்களை நான் கொடுமைப்படுத்தவில்லை' சதாம் உறவினர் பர்சான் இப்ராகிம் நீதிமன்றில் மறுப்பு

ஷியா முஸ்லிம்களை கொடுமைப்படுத்தியதில் தனக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எட்டு பேரில் ஒருவரான சதாம் உசேனின் உறவினர் பர்சான் இப் ராகிம் நேற்று முன்தினம் விசாரணையின் போது கூறினார்.

கடந்த 1980ஆம் ஆண்டு ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேனை கொல்ல நடந்த சதியின் எதிரொலியாக துஜெயில் கிராமப் பகுதியைச் சேர்ந்த 148 சியாம் முஸ்லிம் பிரிவினர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் சட்டவிரோதமாக சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். இந்த வழக்கில் சதாம் உசேனுடன் சேர்த்து 8 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் இவர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனை கிடைப்பது உறுதிஎன்று கூறப்படுகிறது. அதில் சதாம் உசேனின் உறவினரும் முக்காபரத் உழவுப் பிரிவுத் தலைவருமான பரிசான் இப்ராகிம் நேற்று முன்தினம் நீதி மன்றில் முதன் முதலாக விசாரிக்கப்பட்டார். இதற்கு முந்தைய விசார ணையின் போது உழவுப் பிரிவினரால் சிறையில் கொடுமைப்படுத்தப்பட்ட பலர் சாட்சியமளித்தனர்.

அதில் சாட்சியமளித்த ஒரு பெண் தன்னை சிறையில் அடைத்து விசாரணை செய்தவர்கள் தன்னை நிர்வாணமாக தொங்க விட்டு விசாரித்தனர் என்றும் அப்போது தன் மார்பில் இப்ராகிம் காலால் எட்டி உதைத்தார் என்றும் கூறினார். ஆனால் நேற்று முன்தினம் விசாரிக்கப்பட்ட இப்ராகிம் தனக்கும் இந்தக் கொடுமைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று கூறினார்.

மேலும் அவர், கடந்த 1982ஆம் ஆண்டு ஜுலை 8ஆம் திகதி சதாமின் பாதுகாப்பு வாகனங்கள் மீது துப்பாக்கிச்சூடு நடந்த அன்றும் அதற்கு மறுநாளும் மட்டுமே நான் துஜெல் கிராமத்துக்குச் சென்றேன். அதற்குப்பிறகு அப்பகுதிக்கு நான் செல்லவே இல்லை. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைப்பற்றி பொது உழவுப் பிரிவினர் தான் விசாரித்தனர். என்னுடைய முகாபரத் உழவுப் பிரிவினர் விசாரிக்கவில்லை. கைது செய்யப்பட்ட துஜெயில் கிராம மக்களை விடுவிக்கும்படி நான் ஆணை பிறப்பித்தேன். அவர் களுடையகைகளைக்குழுக்கிஅவர்களைவெளியேறச் செய்தேன் என்று கூறினார். (கு)



பாலஸ்தீன நகரான ஜெரிகோவில் உள்ள ஜெயில் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியதில், ஜெயில் சேதமடைந்து காணப்படுகிறது

> சிலர் எதிர்க்கிறார்கள் என்பதால் நன்மையான ஒன்றை அழித்துவிட நான் சம்மதியேன். இதையே வேறு வார்த்தைகளில் சொன்னால் தனிப் பட்டவர்களின் சுதந்திரத்தில் நம்பிக்கையுள் ளவன் நான். -இங்கர்சால்

வலம்புரி

# ஐயா வருக! அபயம் தருக! என அழைத்தது யார்?

சமாதான அனுசரணைப் பணியில் ஈடு பட்டுள்ள நோர்வேயை துரத்த வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அறிவித் துள்ளது.

நோர்வே பக்க சார்பாகச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நோர் வேயைத் துரத்த அரசு முன்வரவேண்டும். தவறின் நோர்வேயைத் துரத்துவதற்கு மக் கள் போராட்டம் நடக்கும் என்பது தேசப் பற் றுள்ள தேசிய இயக்கத்தின் எச்சரிக்கை.

அட! நாசமறுப்பு, நோர்வேயால்தான் இலங்கை என்ற தேசம் இரண்டாகப் பிரியா மல் இருக்கின்றது. நோர்வே அனுசரணைப் பணியை செய்யாமல் இருக்குமாயின் தமிழீ ழத்தின் மூன்றாவது சுதந்திரதின விழா நடந்து முடிந்திருக்கும்.

இதனை உணராமல் நோர்வேயை விரட்ட வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக் கம் அறிவிப்பது ஆச்சரியம்தான்.

இத் தேசத்தின் மீது உண்மையான பற்று இருக்குமாயின் நோர்வேக்கு செங்கம்பள வர வேற்பு அளிப்பதே தேசிய இயக்கத்தின் பணி யாகவிருக்கும்.

இதைவிடுத்து நோர்வேயைத் துரத்த வேண்டும் எனக் கூறுவது செய்நன்றி மறக் கும் செயலாகும்.

இலங்கையின் சமாதானப் பணியில் வலிந்து வந்து நோர்வே நுழைந்து கொள்ள வில்லை. ஆரம்பத்தில் அரசும் விடுதலைப்புலி களும் நோர்வேயின் அனுசரணைப் பணியை மனதார ஏற்றுக் கொண்டன.

இரு தரப்பும் இணங்கிக் கொண்டதன் பிர காரமே சமாதான அனுசரணைப் பணியை ஏற்றுக் கொள்வதற்கு நோர்வே உடன்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோரின் ஆட்சியில் சமாதான அனுசரணையாளராகவிருந்த நோர்வே ஒரு கட்டத்தில் அந்தப் பணியிலிருந்து ஒதுங்கியி ருந்தது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி யேற்ற போது இரு தரப்பு பேச்சுக்கள் குறித்து நோர்வே எதுவும் பேசவில்லை. ஆனால் மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு, வடக்குக் கிழக்கில் படையினர் மீதான தாக் குதல் இடம்பெற்றது.

இதனால் கதிகலங்கிய ஜனாதிபதி, ஐயா வருக! அபயம் தருக! என நோர்வேயை அழைத் தார். அபயக்குரலுக்கு உதவி செய்து விழுந்த அடியை நோர்வே தடுத்துவிட தேசப்பற்றுள்ள சீமான்கள் இப்போது நோர்வேயைத் துரத்த வேண்டும் என்கின்றார்கள். எப்படியிருக் கின்றது பார்த்தீர்களா?

# இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் துணைக் குழுக்கள் இயங்குவது உண்மையே

## கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசபடையினருடன் துணை ஆயுதக் குழுக்களுக்கு இருக் கும் உறவு எத்தகையது என்பதை கூற முடியாது விட்டாலும் அரச படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அக்குழுக்கள் இயங்கி வருவது உண்மையே என்று போர் நிறுத்த கண் காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கருணா விவகாரத்துடன் அரசு தொடர்பு பட்டிருப்பதால் அது தொடர்பான பொறுப்பும் அரசினால் ஏற் கப் படவேண்டியதே என்றும், இந்த விவகாரம் முன்னைய நிலையில் விடுதலைப் புலிகளின் உள் விவகாரமாய் இருந்த நிலை இப்போது இல்லை என்றும் விடுதலைப் புலிகள் தெரி விக்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் லண்டன் பி.பி.சி. தொலைக் காட்சிக்கு வழங்கிய பேட்டியில் கருணா விவகாரம் புலிகளின் உள் விவகாரம் என்றும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுக்கள் இயங்கவில்லை என்றும் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

இதனை மறுத்த கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஆயுதக்குழுக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுறுசுறுப் புடன் இயங்குகின்றன என்பதே தமது நிலைப்பாடு எனத்தெரி வித்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு அரசியல் துறைப்பொறுப் பாளர் தயாமோகன் இது பற்றிக் கூறுகையில் ஒழுக்காற்று நட வடிக்கையின் மீது புலிகள் இயக்கம் கருணாவை வெளி யேற்றியதை சாட்டாக வைத்துக்கொண்டு அரசாங்கம் கரு ணாவுக்கு புகலிடம் வழங்கி எமக்கு எதிரான செயற்பாடுகளில் பயன்படுத்தியது.

இப்பொழுது அது புலிகளின் உள் வீட்டுப் பிரச்சினை என்று எப்படிக் கூறுகிறது என வினவினார்.

மேலும் விடுதலைப் புலிகள் ஏப்ரல் மாதம் பேச்சுக்களில் கலந்துகொள்ளாது விடுமாயின் அது ஜெனீவாவில் அரசாங்கம் பொறுப் பேற்றவற்றை நடைமுறைப்படுத் துவதை நிராகரித்தமையினாலேயே என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தார். (கு-6)

# இந்திய அரசினால்— 10 இலட்சம் ரூபா அன்பளிப்பு

பருத்தித்துறை கொட்டடிசித்தி விநாயகர் ஆலயத்தின் ராஜ கோபுர திருப்பணிவேலைகளுக்காக இந்திய அரசாங்கம் 10 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அண்மையில் இந்தியத் தூதுவர் திருமதி நிருபமா மெனன்ராவ் கொழும்பில் தன்னைச் சந்தித்போது தெரிவித்தார் என பருத்தித்துறை ஸ்ரீராமகிரு ஷ்ண சாரதா சோவாச்சிரம தலைவர் சுவாமி சித்ரூபா னந்தா கூறியுள்ளார்.

இதனை சுவாமி மேற்படி ஆலய அறங்காவல் சபைக்குத் தெரியப்படுத்தியதையடுத்து ஆலயத்தின் வங்கிக் கணக் கிலக்கம் இந்தியத்தூதுவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகத் தெரிகிறது. ஏற்கனவே வெளியான இச் செய்தியில் அன்பளிப்புத் தொகை ரூபா 10 ஆயிரம் எனத் தவறாக அச் சிடப்பட்டு விட்டது. (ஆ-ர)

# 6 பாடசாலைகளுக்கு நிரந்தர— கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி கிழக்கு)

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினரால் வடமராட்சி, வட மராட்சிகிழக்கு பகுதிகளில் உள்ள 6 பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு திட்டமிடல் செலகத் தில் யாழ். மாவட்ட திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் சு.பாலையா தலைமையில் இடம்பெற்றது.

இதில் வடமராட்சி கிழக்கு, மாமுனை பாடசாலைக்கு 11.18 மில்லியன் ரூபாவும், உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு 6.45 மில்லியன் ரூபாவும், கேவில் அ.த.க. பாடசாலைக்கு 4.65 மில்லியன் ரூபாவும், பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரிக்கு 16.48 மில்லியன் ரூபாவும், பருத்தித்துறை மெத டிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு 6.35 மில்லியன் ரூபாவும் பருத்தித்துறைகலட்டிறோ. க. த. க பாடசாலைக்கு 4.48 மில்லியன் ரூபாவும் நிரந்தர கட்டடம் அமைப்பதற்காக ஒதுக் கப் பட்டுள்ளது.

ஹாட்லிக் கல்லூரியில் கட்டட வேலைகள் ஏற்கனவே ஆரம் பமாகியுள்ளது. பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாட சாலை மற்றும் பருத்தித்துறை கலட்டி றோ.க.த.க பாட சாலை யின் கட்டட ஆரம்ப வேலைகள் இந்த மாத முடிவில் ஆரம் பமாகவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வடமராட்சி பாடசாலை அதிபர் கள், வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிர்மாண அபிவிருத்தி முகா மையாளர் எ. கொலின், சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் றுடோல் பங்காசர் ஆகியோர் கலந்து கொண் டார்கள். (க-24,9)

# நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்க இறுக்கமான சட்டக் கட்டமைப்பு அவசியம்

## நுகர்வோர் அதிகாரசபை வலியுறுத்து

(கொழும்பு)

நுகர்வோரின் நலன்களை பாதுகாக்கக் கூடிய இறுக்கமான சட்டக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியிருப்பதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, தரம் குறைந்த மற்றும் காலாவதியான நிர்ணயவிலைக்கு அதிகமானவிலை யில் விற்கும் பொருட்களால் அதிகம் பாதிக்கப்படுவது வறியமக் கள் தான் என நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் ஆலோ சகரான டி. எம். பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய வகையில் சட்டதிட்டங்கள் இறுக்கமானவையாகக் காணப் படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நுகர்வோர் தினத்தை முன் னிட்டு பசுமை இயக்கம் ஏற்பாடு செய்த சொற்பொழிவுத் தொட ரின் முதலாவது நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் நலன்களை பாதுகாப்பதற்காக இந்தியா போன்ற நாடுகளில் அமுலாகும் சட்ட திட்டங்களை இலங்கையும் பின் பற்ற முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-9)

# அரசாங்கத்தில் இணையவில்லை இ.தொ.காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் தமது கட்சி இணையவில்லை என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஆர். யோகரா ஜன் இது குறித்து கூறுகையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் மூன்று மாவட் டங்க ளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பை நாங்கள் ஆதரிக் கின்றோம். அதனால் நாங்கள் அரசாங்கத்தில் இணைந்து விட்டதாக அர்த்தம் இல்லை.

மூன்று மாவட்டங்களில் ஆதரவு அளிப்பதன் மூலம் அப் பிரதேச மக்களின் பிரச்சினைகளை அரசாங்கத்தின் நேரடி கவனத்துக்குக் கொண்டு செல்ல முடியும். இதனடிப் படை யில் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச் சுக் கள் நடத்தப்பட்டதே தவிர அரசாங்கத்தில் இணைவது தொடர்பா கவோ அல்லது அமைச்சுப் பதவி தொடர்பாகவோ நாங்கள் பேச வில்லை என்றார் யோகராஜன்.

அதேபோல், அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது தொடர்பாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜ பக் ஷவுடன் நாங்கள் பேச்சுக்களை நடத்தினோம். அரசாங்கத் தில் இணைவது தொடர்பாக பேச்சு நடத்தவில்லை என்று முஸ் லிம் காங்கிரஸும் தெரிவித்துள்ளது. (க)

# புலமைப்பரிசில்— வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

2004/2005 கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிபெற்ற மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைப வம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடை பெறவுள்ளது. (க)

# வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்; நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து நாளை கலந்துரையாடப்படுமாம்

வடக்கு–கிழக்கில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது தொடர் பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்கும் வகை யில் இந்த வாரத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த தேர் தல் செயல கம் தீர்மானித்துள்ளது. பெரும்பாலான தமிழ்க்கட்சிகளும் அமைப்புக்களும் வடக்கு– கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர் தலை ஒத்திவைக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத் துள்ளன.

இது தொடர்பாக தமிழ்க்கட்சிகளும் தேர்தல் ஆணையா ளருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தன. இதே வேளை, வடக்கு – கிழக்கிலுள்ள உதவித்தேர்தல் ஆணையா ளர்களுக் கும்பிரதேச அரசாங்க படையினருக்குமிடையில் இன்று விசேட பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது.

இதன் பின்னர் தேர்தல் ஆணையாருக்கும் உதவித்தேர் தல் ஆணையாளருக்குமிடையில் நாளை சனிக்கிழமை பேச்சு வார்த்தை நடைபெற விருப்பதோடு, இந்தச் சந்திப்பில் வடக்கு– கிழக்கில் தேர்தல் நடத்துவதா இல்லையா? என்பது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவிருப்பதாக தேர்தல் செயலகம் தெரி வித்துள்ளது. (க-9)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



கையால் கண்ணை மூடிக்கொண்டு யாராவது ஒளி தாருங்கள் என்று கதறுகிறோம். முழு முட்டாள்களே! உங்கள் கண்களை விட்டுகைகளை எடுங்கள் செய்ய வேண்டியது அவ்வளவே.

சுவாமி விவேகானந்தர்

# ஆயுதக்குழுக்களின் செயற்பாடு அரசாங்கத்திற்குத் தெரியும்

## க.கா.குழுத் தலைவர் தெரிவிப்பு

இலங்கையில் துணை ஆயுதக் குழுக்கள் செயற்படுவது தொடர்பில் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறியிருக்கின்றோம் என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச தரப்பிலிருந்தும் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்தும் வழங்கப்பட்ட உறுதிமொழி குறித்தும் நாம் விரிவாகக் கலந்துரையாடினோம். ஜெனீவாப் பேச்சுகளுக்கு பின்னரும் சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. அவை கவலை அளிக்கின்றன.

துணை ஆயுதக் குழுக்கள் இயங்குகின்றன என்ற விடயத்தை அரசுக்கு நாம் எடுத்துக் கூறியுள்ளோம். இது விடயத்தில் தாம் நடவடிக்கை எடுப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நாம் நம்புகின்றோம். துணை ஆயுதக் குழுக்கள் எவையும் இல்லை என்று அரசு தெரிவிப்பது அவர்களைப் பொறுத்தது. அவர்கள் அதை ஏற்கிறார்களோ இல்லையோ ஆயுதக் குழுக்கள் இயங்குகின்றன என்பதை நாம் அவர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம் என்றார் ஹக்ரூப் ஹொக்லண்ட். (ச-5)

### பாடசாலைகள் இயங்கவில்லை

அதிபர், ஆசிரியர்களினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட ஒரு நாள் சுகவீன லீவுப் போராட்டத்தினால் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் இயங்கவில்லை.மாணவர்களும் கல்விசாரா ஊழியர்களும் பாடசாலைக்குச் சமுகமளித்திருந்தபோதும்ஆசிரியர்களின் வரவின்மையால் மாணவர்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். (ச-132)

## விசேட தூதுவர்...

தொடர்பில்லை. அமைச்சரான பின்னர் என்னால் முன்னைப் போல 100 சதவீதமும் இலங்கை விவகாரத்திலே நேரம் செலுத்த முடியவில்லை என்பதுதான் உண்மை.

ஆனால் எங்கள் பிராந்தியத்திலிருந்து இலங்கை தொடர்பாக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு நான் தலைமையேற்பேன் என்றார். எங்கள் பகுதியினுடைய மத்தியஸ்தர் குழு ஒரு புதிய தூதரை நியமித்து வகைப்படுத்தப் போகின்றோம்.

அதுதான் இது என எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் சிறப்புத் தூதுவராக புதிதாக நியமிக்கப்பட இருப்பவர் யார் என்ற விபரத்தை இப்போது வெளியிட நோர்வேயில் இருக்கும் அனுசரணையாளர்கள் விரும்பவில்லை எனத் தெரிகின்றது. இவ்விடயம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதிக்கும் விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் தெரியப்படுத்திய பின்புதான் புதிய தூதர் யாரென அறிவிப்போம் என அவர்கள் அறிவிக்கின்றனர்.

அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் ஜெனீவாவில் வரும் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாவதற்கு முன்பாகவே புதிய தூதர் தனது பொறுப்பை ஏற்பார் எனத் தெரிகின்றது. (ச-4)


## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

தோற்றம்
1923
*
05
*
23



மறைவு
2006
*
02
*
28

அமரர்
### பொன்னையா நாகலிங்கம்

திதி: பிரதமை

சீராட்டி தாலாட்டி சீர்பெற வைத்தீர்கள் – ஏன்
சிவலோகம் சென்றீர்கள். நொந்து தவிக்கின்றோம் – இனி
எங்கு காண்போம். எமக்கேது வாழ்க்கை – என்றும்
வேண்டுகின்றோம் உங்கள் ஆத்மா சாந்தி பெற
சாந்தி – சாந்தி – சாந்தி

இன்று வெள்ளிக்கிழமை (17.03.2006) அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈம சடங்குகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் தந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்,
திருமதி நாகலிங்கம் கனகம்மா(மனைவி)
திருமதி புஷ்பராணி விஜயரெட்ணம்(ஜேர்மனி)
திருமதி லைலாராணி செல்வரெட்ணம்(லண்டன்)
திரு. நா. சுகுமார் (ஆசிரியர்,நல்லூர் ஞானவரோதயா வித்தியாலயம்
திரு.ந. ரகுமார் (பொ.சு.ப.-யா/மா.ந.சபை)
திரு.நா.சுரேஷ்குமார் (கனடா)
திருமதி பிரேமராணி இராஜரெட்ணம்(தே.வீ.அ. சபை திருகோணமலை)
திருமதி பத்மராணி உதயகுமார்(கனடா)

43/1, யமுனா வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.


## பலத்த பாதுகாப்புடன் நடைபெற்ற...

கப்பட்ட திட்டங்கள், 2006 ஆம் ஆண்டு அமுலாக்கப்படவுள்ள திட்டங்கள், திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன குறித்தும் ஆராயப்பட்டது.

இதேவேளை நல்லூர், கோப்பாய், மானிப்பாய்,கரவெட்டி, ஊர்காவல்துறை, சுன்னாகம் ஆகிய பிரதேச சபைகளை நகர சபைகளாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

தொண்டர் ஆசிரியர் சங்கம் உட்பட பல்வேறு சங்கத்தினரால் அமைச்சரிடம் மகஜர்களும் கையளிக்கப்பட்டன. இதேவேளை யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை அதன் பிரதித் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட 8 தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புறக்கணித்தனர்.

இக்குழுவின் தலைவராக டக்ளஸ் தேவானந்தாவும் பிரதித் தலைவர்களாக வடக்குக் கிழக்கு ஆளுநர் மொகான் விஜேவிக்கிரம, மாவை சேனாதிராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

டக்ளஸின் நியமனத்திற்குப் பிரதித் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தைப் பகிஷ்கரித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடும் எதிர்ப்பால் இக் கூட்டத்திற்கு மேலதிக இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

கூட்டம் நடைபெற்ற கட்டடத்தைச் சுற்றிலும் படையினர் பெருமளவு குவிக்கப்பட்டு இராணுவ வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. (து-132,133,43)

## உடன்பாடு நடைமுறைக்கு...

கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் ஆகியோர் நேற்றுச் சந்தித்தனர்.

நேற்றைய சந்திப்புத் தொடர்பாக தமிழ்ச்செல்வன் கூறியதாவது,

நோர்வே அனுசரணையாளர்கள் என்ற வகையில் சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவரையும் கண்காணிப்புக் குழுத் தலைவரையும் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடினோம்.

தற்போதுள்ள சூழ்நிலைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தோம். முக்கியமாக ஜெனீவாப் பேச்சுக்கள் நடைபெற்று ஒரு மாதம் நிறைவு செய்யவுள்ளது. ஜெனீவாவில் இணக்கப்பாடு காணப்பட்ட யுத்தநிறுத்த அமுலாக்கத்தின் சரத்துக்களை அதாவது துணைஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள்களையப்பட்டு தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற முக்கிய தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்படாமல் துணை ஆயுதக் குழுக்களின் தாக்குதல், கொலைகள், அடாவடித்தனங்கள், ஆட்கடத்தல்கள் போன்ற துணை ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் எமது தாயகத்தில் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இந்தத் துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படாது விட்டால் ஜெனீவாவில் காணப்பட்ட உடன்பாடு அர்த்தமற்றதாகிவிடும் என்ற எமது தலைமைப் பீடத்தின் அதிருப்தியையும் கரிசரணையையும் இன்றைய சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளோம்.

துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் எதிர்கால முன்னெடுப்புக்களுக்கு பாரிய நெருக்கடிகளையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் என்பதையும் எமது தலைமைப் பீடத்தின் சார்பாக தெளிவுபடுத்தியுள்ளோம்.

அரச தரப்பினரிடமிருந்து எந்த வித செய்தியையும் நோர்வே அனுசரணையாளர்கள் எடுத்துவரவில்லை. ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னரான எமது நிலைப்பாட்டைத் தான் நோர்வே அனுசரணையாளர்களுக்கு விலக்கியுள்ளோம் என்றார்.

சர்வதேச சமூகம்கூட துணை ஆயுதக் குழுக்கள் தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. அரசின் உடைய கபடத்தனங்களை, போலித்தனங்களை யாருமே நம்புவதற்கில்லை. அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிபை எடுக்க வேண்டும்.

துணை ஆயுதக் குழுக்களின் செய்பாடுகளை மூடிமறைத்து நிலைமைகளைக் குழப்பி அமைதி முயற்சிகளை சீர் குலைப்பதா? அல்லது சமாதானத்தை முன்னெடுக்கின்ற அர்ப்பணிப்பை தாம் காட்டுவதா? என்கின்ற ஒரு தீர்க்கமான முடிபை எடுப்பதற்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கின்றது என்பதைத்தான் கூற முடியும்.

சர்வதேசத்தின் பொறுப்பு அதிகமாகியுள்ளது என்று கருத முடியுமா? எனக் கேட்டபோது, சர்வதேச சமூகத்தின் பாரிய முயற்சிகளுக்கு மத்தியில்தான் ஜெனீவாப் பேச்சு நடைபெற்றது. அந்த முயற்சிகளுக்கு இரண்டு தரப்புமே கடப்பாடு உள்ளவர்களாகவிருக்க வேண்டும்.

இந்த வகையில்தான் ஜெனீவாவில் இணக்கப்பாடு காணப்பட்ட விடயத்திற்கு ஒரு தரப்பு விலகிக் கொள்வதையோ பின்வாங்கிக் கொள்வதையோ சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமாகவிருக்காது.

இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்திற்கு பாரிய பொறுப்பு இருக்கின்றது என்றுதான் கருதுகின்றேன் என்றார்.

துணை ஆயுதக் குழுக்கள் மட்டுமல்ல, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனம், யாழ். அபிவிருத்திக் குழுத் தலைவர் நியமனம் என்பவற்றில் சிறிலங்கா அரசுத் தலைவர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றாரே என்று கேட்ட போது,

அரச தலைவரின் இந்தப் போக்கு என்பது சமாதான முயற்சிகள் மீதும் அரச தலைவரின் செயற்பாடுகள் மீதும் மக்களை விரக்திக்குள்ளும் விசனத்திற்குள்ளும் தள்ளுகின்ற தீர்மானங்களாகத்தான் எம்மால் காண முடியும்.

தமிழ் மக்களுடைய எதிர்ப்புக்கள் விருப்பமின்மைக்கு மத்தியில் மக்களிடம் திணிப்பதென்பது அரசியல் உள்நோக்கம் கொண்டதாகவே இருக்கும்.

அந்த வகையில் மக்களுடைய நம்பிக்கையீனங்களை மேலும் அதிகரிக்கும் வகையில் ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைக்கு வர வேண்டும் என்பது அவசியமானதும் யதார்த்தமானதும் ஆகும்.

அவை நடைமுறைக்கு வராமல் இழுத்தடிப்புக்கள் செய்யப்பட்டால் நம்பிக்கையீனத்தை அதிகரிக்கும். அடுத்த கட்ட முயற்சிகள் எல்லாமே மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியநிலை எங்களுக்கு உருவாகும் என்பதைத் தான் கூற முடியும் என்றார்.

அடுத்த கட்ட பேச்சுக்கு முன்னர் ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என தாங்கள் நிபந்தனை விதித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது என கேட்டபோது,

இது ஒரு புதிய விடயமல்ல. ஜெனீவாப் பேச்சுவார்த்தை அரங்கிலேயே தீர்மானிக்கப்பட்ட விடயம். முதல் கட்டப் பேச்சிலே எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் உடனடியாகவே நடைமுறைக்கு வர வேண்டும்.

எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்களின் அடிப்படையில்தான் அடுத்த கட்ட நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து பேச்சுவார்த்தையைத் தொடரலாம். இதுதான் யதார்த்தம்.

விடுதலைப்புலிகள் போட்ட காலக்கெடு அல்ல. சிறிலங்கா அரசாங்கமும் ஏற்றுக் கொண்ட காலக்கெடு. ஜெனீவாப் பேச்சில் இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட இணக்கப்பாட்டிற்கு அரசு கட்டுப்பட்டு ஆக வேண்டும் என்பதே யதார்த்தம் ஆகும் என்றார் தமிழ்ச்செல்வன்.

ஜெனீவா உடன்பாடு நடைமுறைக்கு வராவிட்டால் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை சாத்தியமில்லை எனக் கருதலாமா? எனக் கேட்ட கேள்விக்கு தமிழ்ச்செல்வன் பதிலளிக்கையில்,

அப்படித்தான் அமையும். ஜெனீவாப் பேச்சில் இணக்கப்பாடு காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அடிப்படையில்தான் அடுத்த கட்ட நகர்வுகள் அமையும்.

நாம் நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். எமது தலைமைப் பீடம் தகுந்த நேரத்தில் நல்ல முடிபுகளை உறுதியாக எடுக்கும் என தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (ச-4)


உரும்பிராய் கனடியர்கள் குழுமம்

### பணியாளர்கள் தேவை

உரும்பிராய் கனடியர்கள் குழுமத்தின் நூலகத்தில் கீழ்க் காணும் பதவிகளில் பணி புரிய ஆட்கள் தேவை.

- நூலகர்
- உதவி நூலகர்
- அலுவலக உதவியாளர்
- இரவுக் காவலாளி

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-
இணைப்பாளர்,
உரும்பிராய் கனடியர்கள் குழுமம்,
உரும்பிராய். (194)








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 17.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.